சித்தமார்க்கம்.காம்

தமிழ் இணையதளம் உங்களை வரவேற்கிறது

From : siddhamarkkam.com

<support>@siddhamarkkam.com

(Supported by Internet Explorer)

**சித்தமார்க்கத்தின் தகவல்களை தமிழில் கண்டு**

மகிழ ஒரு தமிழ் இணையதளம் வாதம், வைத்தியம், யோகம் ஞானம், முப்பூகுரு காய சுத்தி, காய கல்பம் காயசித்தி இன்னும் பல அற்புத தகவல்களை தாங்கி உள்ளது

**அன்பன்**

**அ. இராகவன்**



**அன்பன்**

**அ. இராகவனின்**

பிரணவ சூத்திரம் முப்பு 1

பிரணவ சூத்திரம முப்பூ 2

அகத்தியர் பன்னிரு காண்டம் 200

மூலமும் - உரையும்

அகத்தியர் பரிபாசை 300

மூலமும் - உரையும்

நூல்கள் கிடைக்குமிடம் :


## சங்கர் பதிப்பகம்

15/2, டீச்சர்ஸ் கில்டு காலனி 2வது தெரு,

ராஜாஜிநகர் பிரிவு,

வில்லிவாக்கம், சென்னை - 600 049.

தொலைபேசி எண் : 044 26502086


**போகர் ஏழாயிரத்தில் முப்பூ (அடுத்த மாத இதழ்)**

**தொடர்புக்கு :** +91 93621 28859

**மெய்ஞானம் பதிப்பகம் வெளியீடு, சேலம்** - 6.

e-mail : universraghav@yahoo.co.in

# ஸ்ரீ பிரணவ விலாஸ் ரேகை சாஸ்திரம்



ஸ்ரீ பரமேஸ்வரன் பார்வதிக்கு திருவாய் மலர்ந்தருளிய
பழயை ஏட்டுச்சுவடியிலுள்ள பிர்மாண்ட கேறள ரகசிய நூல்
தற்காலம் சாஸ்திரம் நடக்கும் இடம்

மாயவரம் கூரை நாடு
தாலுகா ............................ கிராமம் ..............................

தென்னகாலம் ........செவ்வாய்மகாதிசை.........
திசை சென்றது போக நின்றது
..........6.......... வருஷம் .........9 மாதம்......... மாதம்
..........3.............. நாள் ..........42.......... நாழி

| | | | |
|---|---|---|---|
| | கே | | |
| | | | சூ<br>புதன் |
| சந்திரன் | | | ல<br>சுக் |
| குரு<br>சனி | | இராகு | செ |

....1941...... வருஷம் ........1...... மாதம்
. தேதி ..................2........................

......விலவ....... வருஷம் .......ஆடி........ மாதம் .........14......... தேதி .....குரு...... வார உதயரதி முதல் ....6... நாழிகை ..8.. வினாடி ...24... தர்பரைக்குள் பிரதியை திதியு ...அவிட்டம்..... நட்சத்திரமும் கூடிய சுபதினத்தில் .........கடையநல்லூர்....... தொலுகா கிராமத்திலிருந்தும் மகா...ரா......ரா.... ஸ்ரீ ......சுவாமிநாதர் அவர்......... குமாரர் ...............சு.கருணாகர சுவாமிகள்...................... பிராவனம் கீர்த்தாயும்

## முன்னுரை

அன்பே சிவம்

சித்தபார்க்க அன்பர்களுக்கும் வணக்கம்

அடியேனின் நூல்களுக்கு பெருமளவு ஆதரவு கொடுத்த அன்பர்களுக்கு ஊக்கம் நல்கிய வாசகர்களுக்கும் முதற்கண் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல் இந்த மாதம் முதல் வெளிவரும் மாத இதழ்க்கும் ஆதரவு கொடுத்து ஊக்கம் தர பணிவன்புடன் வேண்டுகிறோம்.

இந்நூலைப் பற்றி சில வார்த்தைகள்.

பாண்டிச்சேரியை சேர்ந்த அன்பு நண்பர் பிருதிவிராஜ் அவர்களிடம் அதே ஊரைச்சேர்ந்த குணசேகரன் என்ற அன்பர் ஒரு ஒளிப்பிரதியை கொடுத்து படிக்கச்சொன்னார்.

என்ன ஆச்சர்யம்.... அது மகான் கருணாகரர் அவர்களின் கை எழுத்துப்பிரதி.... இதை எப்படியாவது மக்கள் மத்தியில் கொண்டுசேர்க்க வேண்டும் என்ற நோக்கத்தோடு அடியேனை வந்து அனுகினார் அடியேனும் அதை வாங்கி படித்துவிட்டு. இதுப்போல் இன்னும் வேறுதேனும் நூல்கள் உள்ளனவா என்று கேட்டேன். அதற்கு அவர் சொன்னபதில் அதிர்ச்சியும் ஆச்சர்யத்தையும் கொடுத்தது.... மொத்தம் 47 நூல்கள் (குறிப்புகள்) உள்ளன. அவைகள் ஆங்காங்கு உள்ள அன்பர்களிடம் உள்ளன. இந்நூலின் ஒளிப்பிரதியை மனமுவந்து நல்கிய மூன்றாம்அறக்கட்டளை அரச, பிருதிவிராஜன், குணசேகரன் ஆகிய மூவருக்கும் என்மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். இதுபோல் நூல் உள்ளவர்கள் கொடுத்து உதவினால் சித்தமார்க்க உலகம் அவர்களை என்றென்றும் மறவாநன்றியோடு கைகூப்பி வணங்கும்.

மேலும் இந்த மாத இதழ் ஒன்று பவுர்ணமி அன்றும் வெளி வரும். இந்த இதழ் இலவசமாகவும். அடுத்த வரும் நூல்களை தனிப் பிரதி ரூ.10.00 கொடுப்பதாக உத்தேசித்துள்ளேன்.

இறைவன் திருஉளம் எவ்வாரோ அவ்வாரே நடக்கும். வணக்கம்.

அன்பன்

**அ. இராகவன்**





## இந்நூலின் ஒளிப்பிரதியை கொடுத்து உதவிய அன்பர்கள்

மூன்றாம் அறக்கட்டளை

**அரச. இராஜேந்திரன்**

**அமரர். பிருத்திவிராஜன்வர்மா**

**குணசேகரன்**

**அவர்களுக்கு அடியேனின் நன்றியை**

**தெரிவித்துக்கொள்கிறேன்**

# மகான் கருணாகர அடிகள் அருளிய
# ஞானகுரு ஆசான்

ஊடுருவிப் பார்க்கும் அஞ்சனக்கண் EXRAY போன்ற கண்ணொளியைப் பெற்றவாராயும், திரிகாலமுணர்ந்தவராயும் அண்டசராசரங்கள் அனைத்தும் தாமாகக் கருதியுள்ள பெரியாரை, ஆசானைத்துணை கொள்ளவேண்டும்

ஜடாமுடி காஷயதாரிகளானாலும் சரி அல்லது பிர்ம்ம ஞானசங்கததவரானாலும் மண்ணாசை, பொன்னாசை கொண்டவர்களை முடிவில் மண்ணே தின்று விடுகிறது என்பதை நாம் அனுபவத்தில் பார்க்கிறோம்

“என்னுடல் ஆவி, பொருளை எல்லாம் நீ எடுத்து கொண்டு உன்னுடலாவி பொருளை எல்லாம் உவந்து எனக்கேயளிப்பாய்“ என்று இராமலிங்கம் இறைவனைக்கேட்டுபெற்றபடி. அழிவற்ற நிலையிலிருக்க நம்மை நாம் மாற்றிக்கொண்டு மாயையை வென்று ஞானகுரு பின செல்ல முயலவேண்டும். காயசித்தி பெற்ற ஆசானை, உடல், பொருள், ஆவி முழுவதும் யோக சித்தியின் மூலம், வான்வெளி ஆக்ருஷணம் செய்து கொள்ளுகின்றது அன்பின் மிகுதியால் அறவிமுங்கிக் கொள்ளுகின்றது. காயசித்தி பெற்ற ஆசான் ஜடத்தோடு இருக்க விரும்பின் அத்தகைய ஆசானைக் கிரகங்களாலும், பூதங்களாலும் விருப்பத்தை மாற்ற இயலாது, குறிப்பிட்ட ஆயுள் காலத்திற்கு மேல் பூமியில் சடத்தோடு வாழ யாரையும் கிரகங்கள் அனுமதிப்பதில்லை.

காயசித்தி பெற்ற ஆசானுக்கு உலகில் குறிப்பிட்ட கால அளவுக்கு மேல் வாழ விரும்பில் வேறொருவர் காணாது மறைவுமையிட்டு வாழலாம். மறையாது தோற்ற மளித்தால் கிரகங்களின் இயக்கங்களும் சீர்லையும் இராமலிங்கசுவாமிகளுக்கும் இத்தகைய சம்பவம் தம் வாழ்க்கையிறுதியில் ஏற்பட்டதால் தாமும் மறைவுமையிட்டு உலகத்தவர் கண்களில்படாது மறைந்து வாழ்ந்து கொண்டிருக்கிறார் ஒருவன் உலகில் ஆயிரம் வருடம் வாழலாம் என்று ஆதியில் இறைவனால் தீர்மானிக்கப்பட்டிருந்தால் மட்டும் பூமியில் யாவரும் காண அவன் வாழமுடியும். வானவர்களும் பூமியில் தோன்றி காட்சியளிக்க வேண்டுமானால் இறைவனின் கட்டளை இன்றி பூமியில் வாழ, விண்ணவர்களால் முடியும், ஆனால் மறைமுக மாகத்தான் வாழமுடியும், இதன் இரகசியம் பிரம்மவித்தையுணர்ந்தவர்கள் மட்டும் ஏற்றுக்கொள்ளுவார்கள்.





சிலது பேர் பிரம்ம வித்தை பொய்யென்பார்கள்
சித்த சுத்தியானவரைத் தெரியப்போமோ
தொலையாத பூமியிலே அறிவு கொண்டு
சோதித்தால் கோடியிலே ஒருவனுண்டு
கலகமிடா நற் சீடன் அறிந்து கொண்டால்
காந்த அயம் இழுப்பது போல் கலந்து கொள்வார்
மலையென்ன உலகமென்ன மனந்தானென்ன
மௌன வித்தை அறிந்திருக்கும் வகையாளர்க்கே

வகையறிந்த பெரியோர்கள் மலையிலுண்டு
வையகத்தில் ஜெகத்திலுண்டு வாழ்ந்தாலும் தான்
பகை அணுகார் உறவு கொள்ளார் உலகாசாரம்
பந்தம் விடார் கர்மானுபவத்துட் சிக்கார்
செகம் விளையாட்டதிலிருக்கார் சினந்து பேசார்
சிவ மய விகற்பமுறார் திறந்து சொல்வார்
அகமுறையார் சீவ பரமாத்மா வெல்லாம்
அவராகி நின்றிருப்பார் ஆசான் தானே

ஆசானைக் கண்ட பேர்க்கும் ஞானப் போக்கும்
அப்போதே யோகத்துக்கு அருளுண்டாகும்
பேசாதே மௌனம் என்ற பிரம்ம வித்தை
பிடரி வழி கண் திறந்து பிரகாசிக்கும்
பூ சார வஸ்த்து அப்பு வன்னி பீஜம்
புதைத்த விடம் தன்னைக் காட்டப் பொருளுஞ்
கேசாதி பாத முதல் நடுவந் தோன்றும்
கெவுனம் என்ற குளிளையடா கிடைக்கும் பாரே “
(பதஞ்சலி வாத சூத்திரம் –21)

மேலே குறிப்பிட்ட இலட்சணமுடைய ஆசான் காவியுடை பாதக்குறடு, ருத்திராட்ச மணிகள் தண்டு கமண்டலம் யாதொன்றும் சாதனக் கருவிகளாகக் கருதி அணியமாட்டார். தன்னை பிறரறியாது வாழவிரும்புவர். உண்மை ஆசானை தெரிந்து கொள்ள அவர் கண்களைக்கொண்டுத்தான் தெரிந்துகொள்ள முடியும் பக்குவமடைந்த ஆசான் கண்கள் கடப் பொருள்களைப் பாராது. தன்னையும் எதிரிலுள்ள பொருளையும் நோக்காமல் கிடையேயுள்ள புள்ய பரவெளியே குறிப்பாக உற்று நோக்காமல், இடையேயுள்ள பரவெளியே குறிப்பாக உற்று

நோக்கிக் கொண்டிருக்கம் பூசார வஸ்து உப்புவன்னி குஜம் கற்பமாக முடிந்துவுண்டபயனால், அது அதையே கதியெனப் பார்த்துக்கொண்டிருக்கம் வல்லமையை ஆசானுக்கு அளிக்கிறது. பிரணவபீஜத்தின் வல்லமையால் யாசகம் செய்யது தாமிருந்த விடத்திலிருந்தபடியே அஷ்டகர்மத் தொழிலில் தேவையான பொருளைத் தரிவித்து கொள்ளலாம் அதனால் இத்தகைய பெரியோர்களின் இலக்ஷ்ணங்களைக் கீழ்வரும் பாடலால் நன்குணராலம்.

உள்ளமற்றார் உள்ளத்துறு பொருளற்றாருள்ளக்
கள்ளமற்றார் ஞானக் கரையற்றார் – தெள்ளமுதச்
சிந்தையுமற்றார் சிவானுபவம் தானுமற்றார்
கற்பனையுமற்றார்கள் காண்.

நித்த நிராகரே நிர்மலானந்தமாய்
சுத்த பரிபூரண சொரூப – வந்து விந்
தேல்லாம் முந்தாமலிப்பார் கருணை பெற
வல்லார் அவராகுவார்.

அண்மெல்லாந் தானாயறிவு வடிவாகக்
கண்ட பரமானந்த சிவாகாரருக்குத் – தண்டித்துத்
தள்ளும் பொருளது தள்ள விதி வழியே
கொள்ளும் பொருள் ஏதுவாகும் சொரூப சாரம்

ஞானிக்கு இன்ப தும்பம் நவிலுதற்கு இல்லை
மேலும் தானிருக்க விடந்தேடான் – தங்குமிடம்
தானறியான் ஞானி சூன்ய மயமாகி தில்லை
வெளியே சதாகதியெனக் கலந்திருப்பார்

அறிவு கலைந்து இக வாசனையில் கலக்கும்போது
தன் சடத்தின் ஞாபகம் வரும் அப்போது பசி
தாகம் துக்கமற்றவராதலால் – உலகிடை இன்ப
துன்பம் பீடிக்கப் படாது உலகமெல்லாம்.

தன்னிடம் இயங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்த பிறகு
சூன்ய மயத்துள் லயமடைந்து இருப்பவரே ஞானியாவார்,
அவரே லோக குரு ஆவார் அவரே அகர உயிரை
போதிக்க வல்ல ஆசானுமாவார்.





# தன்னையுணரும் மாணாக்கன் நிலை

மக்களின் பெரும்பாலோர் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என உலக நடைமுறையில் உள்ளது போல் தாமும் இயங்கிக்கொண்டிருக்கிறார்கள். நாம் யார் ? எங்கிருந்து எதற்காக இங்கே தோன்றி இருக்கிறோம் என்ன செய்ய கடமைபட்டிருக்கிறோம் சீவன் பிரிந்த பின் என்ன கதியை அடையப்போகிறோம் என்ற கவலை கொள்ளாதவர்களாய் இறக்கத் துணிந்து கொண்டவர்கள் போல் வாழ்ந்து வருகின்றோம். சுற்றத்தான் அல்லது உடன் பிறந்தான் மரண முற்றதைப் பார்த்து கவலைப்படுவதுடன் நின்று விடுகின்றோம். மரணத்தைத் தவிர்க்கும் வழி ஏதேனும் உலகில் இருக்கிறதா வென்று சிந்திப்பதற்கும் நேரமற்றவர்களாககி நட்பை, ஊழ்வினை உலக மயகத்தில் ஆழ்த்தி விடுகின்றது மனிதப்பிறவியின் கடமையை உணராதவர் கடைமாணாக்கராவர் உண்மையையுணர்ந்தவர் புத்தர் என்பது எப்படி சரித்திர வாயிலாக உணருகிறோமோ அதேபோல் உணர்ந்தவர்கள் சித்தர்கள், உண்மைக்கடன் உணர்ந்த மாணாக்கன் உலகை ஓர் குடைக்கீழ் ஆளும் மன்னனின்மைந்தனுமாகவுமிருக்காலாம், பாரளும் பார்த்திபனாக வுமிருக்கலாம் அல்லது பார் முழுதும் பட்டினியுடன் போராடிச் சுற்றிவரும் பஞ்சையாகவும் இருக்கலாம் பராரியாகவுமிருக்கலாம் இத்மகயை ஒருவன் உலகின் கண்காணும் யாவும் அழிந்து கொண்டிருக்கின்றனவே ஒன்றும் நிலையாகத் தெரியவில்லையே அவற்றுள் நாமும் ஒரு பொருளாக இருந்து அழியும் காலத்தை எதிர்பார்த்து நடைபிணமாகயிருக்கிறோம் என எண்ணாமல் இருக்கமுடியாது.

மாற்றி பிறக்க மருந்தெனக்கு கிட்டவில்லை
மாற்றி பிறக்க மருந்தெனக்குகிட்டு மென்றால்
ஊத்தை சடலமிட்டு – என்கண்ணம்மா
உன் பாதம் சேரேனா

அழுகண்ணி சித்தர்

கூறியபடி மாணாக்கனும் நினைத்து தினைந்து கசிந்து மாற்றி பிறக்கவகை எதும்

புகலாய் என்று இறைவனைக் கருணைபுரியுமாறு வேண்டவேண்டும். சிலருக்கு இத்தகைய என்னம் தோன்றிக் தோன்றி மறைந்து கொண்டிருக்கும் சிலருக்கு தோன்றிய எண்ணம் மறையாதபடி அதே சிந்தனையாக மனதை துன்புருத்திக்கொணடிருக்கும் மரணபயம் இவரை இப்படி வாட்டிக்கொண்டிருக்கவே, மனம் திடம் பட ஒடு முடிவிற்கு வருகின்றது என்றும் நிலைமாறாததும், சாஸ்வதமாக உள்ள உண்மைப் பொருளை அடைய வேண்டும் என்ற அசைக்க முடியாத ஆசை மாணாக்கன் மனதில் குடி கொள்ளுகின்றது இவனுக்கு இரவு பகலாய் மனம் சிந்தனையிலாழ்ந்து ஊனுறக்க மற்று ஒன்றும் தோன்னாதவனாய் இவன் மனம் சூன்யமாகிய சுத்த வெளியில் இவனையுமறியாது சற்று நேரம் இலயமடைந்து விடுகின்றது.

இப்பிறவியிலேயே இரண்டற்ற இறைவன் நிலைய அடைய அவர் மேலிட்டு மாணாக்கன் இயற்கையின் சுபாவத்தினின்றும தப்பிப் பிழைத்திருக்கும் வழி ஓலை சுவடிகளில் ஏதேனும் முன்னோர்களால் எழுதி வைக்கபட்டிருக்கிறதா? அப்படி இருந்தால் அக்குறிப்புகள். உலகில் எங்கே யாரிடம் கிடைக்கும் என்று தேடி அடைய மனம் அவா கொள்ளுகின்றது.

“பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றை
பற்றுக பற்று விடற்கு” (வள்ளுவர்)

தோற்றம்யாவும் பரம்பொருளின் சிருஷ்டியாயிருந்தும் அவற்றைத் தன்னுடைய தெனப்பற்றாது, தாமரையின் நீர் போல் இருக்கும் வான் வெளியைச் சதா சிந்தனை செய்து கொண்டிருந்தோமானால், உலகத்தோற்றம் யாவும நிலையற்றன வென்பது நமது மனம் நன்கு உணரப்பெறும உலகப் பற்று நீங்கி இறைவனோடு மனம் ஒன்று பட்டிருக்கும்.

நிலை மாணாக்களுக்கு உண்டாகி ஒன்றும் புரியாதவனாய் ஆழ்ந்து சிந்தனை செய்கின்றார் உண்மை ஞானம் கற்றறிந்த அன்பர்களைப் போய் சந்தித்தால் அவருடன் கூடி வாழ்ந்தால், பிழைத்திருக்கும் வழிக்குப் புலன் காண முடியும் என்று ஒரு முடிவிற்கு வருகின்றான். உடனே அரண்மனையை விட்டு உய்ய வழிகாட்டும் ஆசான் எங்கே இருக்கிறார் என்று புலன் விசாரித்துக் கொண்டு வீட்டை விட்டு வெளி கிளம்புகிறான்.





“அன்பர் பணி செய்ய என்னை ஆளாக்கி விட்டு விட்டால்
இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே”

என்று தாயுமானவர் கூறியதும் மனதிற்கு நினைவு வருகின்றது மாணாக்கனுக்கு இது உண்மையானால் உண்மை மெய்யடி யார் எங்குள்ளார் விதி நம்மை இயக்கும் வண்ணம், நாம் செல்வோமானால் மெய்யன்பரிடத்தே நம்மை சேர்ப்பிக்கும் என்று கொஞ்ச தூரம் மெய் மறந்து சென்றதும்

மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய் பணிவர்க்கு
வார்த்தை சொல்ல சற்குருவும வாய்க்கும்-பராபரமே
தாயுமானவர்

என்று தாயுமானார் கூறியுள்ளதையும் நினைத்து தன்னையும் தன்னை இயக்கும் ஆதாரத்தலைவனையும் நோக்கி ஏமாயாசொருபியே சூன்ய மயமே கண்ணுள் ஒளியாய் கலந்திருக்கும் காவலனே கண்ணே கருத்தாகிக் காண்பார்க்கு காதலனே எண்ணே எழுத்தாகி ஏகாட்சரமானவனே மண்தோன்றி விண்ணெழிந்த, மாயமதிப்பாலீன்றவனே வின்றவனே உன்வெளியுள்ள உலகனைத்தையும் காண வைத்தாய். என்வெளியுள்ள அத்தனையும் மியங்குவதைக் காண வைத்தாய் நானே நீ நீயே நான் நாமிரண்டும் ஓன்றென்றால் மொன்றொய்ய நான் என்ற அகமற்றார்க்கு நாதவுரு நானென்றாய் கண் கலங்கக்ச சரமாகிக் காண்பவர்க்கு அகர மென்றாய் விதிகதியென்னிருந்தோர்க்கு வானமுதலாய் வந்தமர்ந்தாய் வியந்து சிந்தித்து ஓய்வுற்றிருக்க, வல்லமை யளிப்பதும் நீ வேத இதிகாச புராணங்கள் புகழ்ந்து போற்றுவதும் ஜனகாதி முனிவர்கள் கந்தருவர், கிண்ணரர்கள் மற்றமுள்ள விண்ணரர்கள் யாவரும் தொழுது அருகில் வீற்றிருக்கக் கூடியதும் நினது சகல சுதந்திரததையும் கை எழுத்துடன் ஓமெனும் பொருளை நின் பிரதிபிம்பமாக உலகிடைத் தோன்றியிருக்கச் செய்துள்ளது. எது வென்றால் இறைவனே மாணாக்கன் அறிவினின்று இதுவே என்ஞான சொரூபம் ஓமெனும் அண்டம் அறிவின் பிரதி பிம்பம் என்று உணர்த்தித் தரும் என்று அன்பர்கள் கூறக்கேட்டிருக்கின்றேன் அத்தகைய நின் பிரதி நிதித்துவம் வாய்ந்த வானத்தவர்

வைப்பைஅமுத கலகத்துள் அட்சய பாத்திரத்துள் வைக்கப்பட்டிருக்கிறதாமே ! அதுவே மோனமுற்ற ஞான சொரூபம் அரி என்றும் கருதரிய சிற்சபையில் ஆனந்த தாண்டவமாடிக் கொண்டிருக்கிற தென்றும், இது பர சாதன மளிக்கும் (இது இத்தகைய கங்கைவார் சடைக்கறந்தார்க்கள் எங்கிருக்கின்றார்) இரு நிதிகளாவுள்ள “அ“ வென்ற நாத வடிவம் இது வென போதிக்கக் கூடிய ஆசான் எங்கிருக்கிறார் எனத்தளக்குள்ளே இறைவனை நினைத்து ஏங்குகிறார்

“கன்றாகிக் கதரினர்க் கேதாயாகிக் கடிதினில் வந்தருள் கூறும் கருணை விண்ணே“

என்று தாயுமானார் கூறிய பாடல் உண்மையாயின், அறிவினின்று இயக்கும் வான் வெளியே நான் உன்னைக்கேடகும் பிச்சைக்கு செவி சாய்க்காது வாளாயிருக்கும் காரணம் யாதோ? பருவத்தாலன்றிப்பாழா என்று முது மொழிப்படி ஆசான் கிட்டும்காலம் வினையை ஒட்டி நிற்கின்றது போலும்.

“ஞாலம் கருகினும் கைகூடும்
காலம் கருதிசெயின்“ (வள்ளுவர்)

ஒவ்வொரு காரியமும் நிகழவேண்டியகாலம் விதியின் வல்லபத்தால் கூடவேண்டும் விட்ட குறையுள்ள வனாதலால் நானும் இடைவிடாது என்எண்ணம் நிறைவேறும் வரையில் ஆசான் என்று வருவார்? இன்ப வெள்ளம் என்று அருள்வார் என்று எதிர்நோக்கிய வண்ணம் கையேந்தி நிற்கிறேன் என்று தனக்குத்தானே கேள்வியும் பதிலும் கொடுத்துக்கொண்டு வாளாயிருக்கின்றார் இவ்விதம் ஆசானை தேடி தேடி ஐந்தாறு வருடம் களிந்தன.

“எண்ணிய எண்ணியாங்கு எய்தும் எண்ணியர்
திண்ணியராகப் பெறின்“ (வள்ளுவர்)

தாமெண்ணிய காரியத்தில் உறுதியுடன் நின்று உழைப்பவர்க்கு கிரகங்கள் நல்நோக்கோடு ராசியை அல்லது லக்னத்தை பார்க்கும் காலம் கூடும் போது ஜாதகன் சன்மார்க்கனானால் இறைவனின் பிரதி நிதித்தும் வாய்ந்த உண்மை என்ற அட்சரம் ஒடுங்கினின்ற குண்டலினி சக்தி அமுரி மூலம் புளியாகிய





அஷ்டாக்ஷரம் பிந்தெழுத்தாய் நின்ற பெருமானின் திருப்பாதம் பேசா தெழுத்தின் பேருருவம், முப்பொருளாய் நின்ற முதலெழுத்தை விடாது ஓதும். உயிர் எழுத்தின் உடல் தோற்றத்தை சின் முத்திரையின் இலக்ஷ்ணக்குறிப்பை நூல்கள் மூலமாகவோ அசரீரி வாயிலாகவோ அல்லது ஆசான் நேர்முகமாகவே தோன்றி மாணாக்கனை ஏற்றுக்கொள்வார் தேடற்கரிய உண்மை துறவியை புண்ணியவசத்தால் மாணாக்கன் கண்டு உறவு கொண்டு அவரிடம் தம்முடல், பொருள், ஆவியைத் தத்தம் செய்து உடலும் நிழலும் போல் காத்திருந்து மனம்களிக்க பணி புரிந்து வர தம்மை ஏற்றருளுமாறு இறைஞ்சி நிற்கின்றான் இவ்விதம் பன்னிரண்டு ஆண்டும் கடந்தன உண்மை போதிக்கப்படாதிருந்தும் சலிப்படையாது கொண்ட எண்ணம் சிறிதும் மாறாது எவ்விதத்திலும் உண்மைப் பொருள் உபதேச வாயிலாக உணர கண்ணும் கருத்துமாக இருந்து வருகின்றான்.

மேய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண் துஞ்சார்
எவ்வெவர் தீமையும் நேர் கொள்ளார் – செவ்வி
யருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்
கருமமே கண்ணாயினார்.

என்ற கருத்தக் கினங்க பொருமையோடு நடந்து கொள்ளுகிறார் இதை நன்குணர்ந்த துறவியும் மாணாக்கனைந் கோழி, தன்குஞ்சுகளைக் சிறகுகளில் வைத்தனைத்து பருந்துகளுக்கு இறையாகாது பாதுகாத்தல் போல், பருவகாலம் வருகிற வனயில் தன்பாது காப்பில் வைத்திருந்து.

ஆளாக்கிச் சொன்னாலனே இவனாகும்
பாழாக்கி விட்ட குருபாழ்

என்றபடி நாளடைவில் மாணாக்கனை பரிபக்குவப் படுத்திக் கொண்டே வந்து காலம் சமீபித்ததும் ஆசான் மாணக்கனுக்கு உபதேசம் செய்யத்துணிந்தார் இப்படி இருக்கும் போது மானாக்கன் அன்னியனையும் தாமாக கருதுகிறான் வென்று பார்க்க ஓர் சூழ்ச்சி செய்தார் மாணக்கன் காவிரிக்கும் போய் தீர்த்மயாடி வரும் வழியில் ஆசான் மாறு வேடத்தில் மாணாக்கனருகில் சென்று கொண்டு இருந்தார் மாணக்கன் உடை காற்றில் இவர்மேல் பட்டதும் என்னடா புலையா என்னையார்

என்றறியாது என்னைக்தீண்டி என் ஆசாரத்தை கெடுத்தாயே உனக்கு யாருடைய தைரியம் என்று ஒரு கன்னத்தில் ஓங்கி அடித்தார். மாணக்கன் உபதேசம் பெறாவிடினும் சகல ஜீவன்களும் ஒன்றே என்ற ஞானவாசிட்டதை நன்குணர்ந்து பொருமையே உருவாக வந்தவர் ஆனதால் அடித்தவறைப்பார்த்து மற்றொரு கன்னத்தையும் காட்டி விருப்பம் நிறைவேரட்டும் என்று வாளயிருந்தார். அடித்தவன் மாயமாக மறைந்தான். மாணாக்கன் இனி எத்துறையிலும் தேர்ச்சி பெற்றிருக்கின்றான். தன்னை எதிரிகளிடமிருந்து தற்காத்துக் கொள்ளும் சக்தி அன்பின் பெருக்கால் வந்து விட்டது என்ற குறிப்புணர்ந்து மன மகிழ்ச்யுடன் தம்கொள் கையை தமக்கு பின்னும் தொடர்ந்து நடத்துவான், சித்த ருலகமும் சித்தாகுலமும். விளங்க பிரணவ பீஜம் பாத்திரம் அறிந்து பிச்சையிடும் கொள்கை போல் பக்குவிகளுக்குப் போதிக்கும் ஆற்றலுடையயவனவான் என்ற ஆசான் ஒன்றுக்கு பத்து முறை யோசனை செய்து மனத்துணிவு கொண்டு மாணாக்கனை அருகே அழைத்து அருள் பாலிக்கலுற்றார்.

"திட்டமுடன் சற்குரு தமக்கு வரச் சித்தி
எட்டது கிடைத்திடும் இதற்குத் தடையில்லை
விட்டகுறை வாய்த்திட விளங்கும் பிரிபாஷை
தொட்ட குறை முடிவு வந்து தோன்றுமுடனாண்டே

(வள்ளுவர்)

உபதேசக்கிரமப்படி அக்ஷ்ர அப்பியாசம் செய்யத்துணிந்து கொள்ளுகிறார் அதில் உயிரனைத்தும் தாமாகக்கருதும் மனோபாவம் எற்படுவதே மாணாக்கனுக்கு உபதேசம் பெறுவதற்கோர்ப்பக்குவ காலமாகும் இதை நன் குணர்ந்த ஆசான் அன்போடு கூடியவராய் மாணாக்கனை அருகே அழைத்து உட்காரவைத்து கூறலானார்.

பொய் வளரும் நெஞ்சினர்கள் காணாத காட்சியை பொய்யில்லா மெய்ய பிறிவிற் போத பரிபூரண வகன்ற தாகாரமாய் போக்குவர வற்ற பொருளைத் தெய்வமறை முடிவான பிரணவ சொரூபியை சித்தாந்த முத்தி முதலை சிரகிரி விளங்குவரும் தட்சணாமூர்த்தியை சின்மயா நந்தகுருவை சாகாவரம் அருளுஞ் சஞ்சீவியைஇருவினைத் தொடர்பறுக்கும் ஏகாக்ஷ்ரத்தை மாயறும் மந்திர





சொரூபத்தை அட்ட சித்தயருளும் அஷ்டாக்ஷ்ரத்தை ஐந்து பத்து, ஒன்றாகிய ஐம்பத்தோரக்ஷரத்தை அம்பலத்தாரசாகிய அருமருந்தை வலக்கர குறிப்பினால் விளங்கும் சின் முத்திரையோடு கூடிய ஓம் என்றம் பிரணவ ஐத்தை உள்ளங்கை நெல்லி கனியென விளக்கி அதில் வாமும் அழியா உயிரைப் பிரித்துக் காட்டி கையீலிந்து இதுவே உயிர் முதல் எழுத்தாய் யுள்ள நாதப்பொருள் அதற்கான அங்க அடையாளக்குறிப்புகளைபார்.

இதே உபதேசத்தை ஏசுநாதர் பைபிலில் கீழ்கண்ட வாக்கியங்களால் விளக்கியுள்ளார் ஆனால் அதில் ஆதாம் ஏவாள் ஒன்று கூடிவுள்ள பொருளாகிய நாதவிந்துகள் அடங்கியது உலகத் தோற்றத்திற்கு முதலானதும் உயிரைமுத்துக்களுக் கு முதலானதுமான "அ" A வென்ற நித்ய ஜீவனாகிய பொருள் கரமென்ற சடத்துள் அடங்கியிருப்பதைத் தேடுங்கள் என்ற முக்கிய அடையாளக்குறிப்பை, மக்கள் எப்பாடு பட்டும் உணர ஊக்க மளிக்கும் வாக்கியத்தை தேடுங்கள் .

உயிர் முதலமுத்தாயுள்ள அகரம் இறைவனின் பிரதிபிம்பம் (The image of God) கிடைக்கும் என்று கூறாது விடுத்து மற்ற கிரியாம்சங்களுடைய வாக்கியங்களை மட்டும் விளக்கப்பட்டுள்ளது. என்னால் அதற்கும் சில காரணம் இருந்திருக்க வேண்டும். அதை எதிர்பார்த்தே ஏசு கிருஸ்து

தேடுங்கள் கிடைக்கும்
தட்டுங்கள் திறக்கப்படும்
கேளுங்கள் கொடுக்கப்படும்

என்தன் உபதேச மொழிகளை உலகத்தவர்கள் உய்யும் பொருட்டு விடுகதையென வெளயிட்டிருக்கின்றார்.

இவ்விதம் கூறப்பட்டுள்ள உபதேச மொழியால் பலர் பலவிதமாக வியாக்கியானம் செய்கின்றார்கள் சிலர் பிரம்மரந்தரத்தைத் தட்டவேண்டும் சுவாசத்தினால் அப்பொழுது ஞானமயமாகிய அறை கிடைக்கும். அதை தட்டினால் கதவு திறக்கும் அங்கே கேட்ட தெல்லாம் கிடைக்கும் என்றும் சிலர் புறத்தேயுள்ள இறைவனின் வைப்பு உலகிடை கிடக்கின்றது. அதைக் தேடிக் கொண்டுவந்து தட்டித்திறந்து அதை செய்ய வேண்டிய கிரியைப்படி செய்து கரத்தில் வைத்துக்கொண்டு அதை கேட்ட தெல்லாம் தரும் உண்மை ஞானம் இது தான்

கேட்டதெல்லாம் தரும் உண்மை ஞானம் இதை தீட்சாவிதப்படி பக்குவம் செய்து உண்டு வந்தால் இருவினைத் தொடர் பற்று உன்னுடைய எண்ணம் போல் அயர்ந்து யோக நித்தரை சென்னியில் செய்ய வல்லமையளிக்கும் அகரம் இதுவே என்று எடுத்துக்காட்டி கட்டித்திறந்து தெளிவுபடக் கூறுகின்ற இதுவே 96 தத்துவங்களையும் தொழில்புரியாது அடக்கி யாளும் வல்லமையளிக்கும் அமுதசுரபி வித்தையும் நீரையும் தாங்கி நிற்கும் சித்தர்கள் அமுதகலசத்தின் திருவோட்டைத்திறந்து பார் இந்த வோடே அமுத கலச மென்றும், அக்ஷ்ய பாத்திர மென்றம் வேத புராணங்கள் புகழ்கின்றன ஆனால் இந்த அக்ஷ்த்திற்க மேனாட்டார்கள் மட்டும் இவ்விதக் காரணப் பெயர்கள் புனைந்தார்களில்லை எனினும் ஏசு கிருஸ்து கூறியது மூன்று வாக்கியங்களும் கீதையில் கண்ணன் கூறிய நான் அகரமாயிருக்கின்றேன் என்ற வாக்கியத்துடன் ஒப்பிட்டு சீர்தூக்கி வாசகர்கள் கவனிப்பார்களேயானால் ஞானம் அதே தருணத்தில் கூர்ந்த அறிவுடையோர்களுக்கு உடனே விளங்கிவிடும் இதை ஒவ்வொரு மெய்யடியார்களும் ஆழ்ந்து சிந்தனை செய்துபார்ப்பார்களேயானால் உண்மை விளங்கப் பெறலாம். தேடி கிடைக்கப் பெற்றதும் தெய்வ மணங்கமழும் தேவார்முதம் நிறைந்த அகரத்தைத் தட்டித்திறந்துப்பார். அதிலிருந்து வெளிகாண வந்த திருவுருவம் எப்படி இருக்கின்றது என்று ஆசான் கேட்க மாணக்கன் கூறுவதாவது. சுவாமி இது முத்துக்கு வியல் போன்றிருக்கின்றது ஒரு சமயம் மன்னர் கிரிடங்களில் தோன்றும் பூக்குஞ்சம் போல் தெரிகிறது. கொஞ்சம் தளதித்தின் பார்த்தால் முட்டை போன்றிருக்கின்றது. ஒரு சமயம் நவரத்தினங்கள் இணைந்த ரதம் போலிருக்கின்றது என்னால் முத்து போன்று முத்துக்குமரன் முருகன் என்றழைக்கலாயிற்று முட்டை போன்ற நிலையைப்பார்த்து சிவம் மென்றும் பிரணவமென்றும் அண்டமென்றும் அழைக்கலாயிற்று இப்படி ஒவ்வொர் நிலையயும் ஒவ்வொரு காரணத்தை பெயரிட்டழைக்க யானார்கள் சித்தர்கள். பிரணவ பீஜம் ஒன்றே நிலைக்கு அகரமென்றும் இரண்டாக நிலைக்கு, அமுரி மூலப்புளி என்றும் என்றும் மூன்றாக ரசம், செந்தகம், உப்பென்றும், திருமூர்த்திகள் என்றும் திருத்துவம் என்றும் 4 நிலைக்கு நூல்கள் நாள்ளொன்றும் 5 பஞ்சபூதம் சேர்ந்த பொருள் வான்வெளி என்றும் அல்லது அகரமென்றும் சித்தர்கள் கூறியுள்ளார்கள். செத்தவரை எழுப்பும் குறிப்புகளில் புராணக்கதைகளில்





காணப்படும்.

இவை எல்லாம் இப்பிரணவ பீஜத்திலிருந்து பிரியும் நீரினால் எழுப்பத்தக்கவைகளேயாம் வேத இதிகாச புராணங்கள்யாவும், மனிதர்கள் மரணமற்ற வாழ்வையடையத்தூண்டி அவற்றிற்கான கைபாகங்ளையும் செய்பாகங்ளையும் கதையாக விளக்கி காட்டியுள்ளனர். புண்ணிய குறைவினால் புராணங்களின் விடுகதைகளுக்கு அர்த்தம் விளங்காதவர்கள் மரணகதியை முடிவில் பரிசாக அடைகின்றார்கள். 10 வருடங்களுக்கு பின்னால் மரணமடையப்போகிறவன் சுத்த வீரசன் மார்க்கனானால் மரணமற்ற வாழ்கையை அடைய விரும்புவார்கள் இயற்கையில் அழியக் கூடாத பொருள் என்னவிருக்கின்றத என்று ஆராய்ந்தறிந்து அதை உண்டு தானும் அழியாதிருக்க விரும்பிப்பாடுபடுவான் சன் மார்கத்தின் இயற்கையை நன்குணர வேண்டுமானால் வேத இதிகாசபுராணங்களே காட்சிக்கு புலனாகக் கூடிய கண்ணளிக்கும் தெய்வங்கள் இவற்றின் உண்மை விளக்கம் தோன்றாத்துணையாகக் கதைகளில் புதையுண்டு கிடக்கின்றன. நாம் இதுவரை ஆதாரமாகக்கொண்டுகூறி வரும் அண்டக் கல்லும் வேணது கிடக்கின்றன என்பதை நன்குணர்ந்த தாயுமானார் மனந்தாழாது வீணுக்கிரைத்து விடுகிறீர் பாணநீர் தேனையுண்டு தெளிந்தனர் சித்தர்கள் என்று தெளிவுபட குறிப்பிட்டுள்ளார். புராணங்கள் கற்பனையே யானாலும் அவற்றின் கருத்தோ பல பாஷைபடித்த பண்டிதனையும் ஏமாற்றி பொருள் விளங்க வெள்ளுவதில்லை ஆனால் கல்லாத பேர்களே நல்லவர்கள் கற்றுமறிவில்லாதவன் கன்மத்தை என் சொல்வேன் மதியை என்சொல்வேன் என்று தாயுமானார் வியந்து கற்றவர் நிலையைக் கூறி வருத்த முற்றார். இவரைப்போல் வெகு எளிதில் கிடைக்கக் கூடிய அண்டக்கல்லைப்பெற்றால் எல்லாம் எளிதில் சாதிக்கலாம் என்று கண்டறிந்த பட்டணத்தடிகள் கருத்தை கவனிப்போம் ஓங்காரமாய் நின்ற வத்து விலேயொரு வித்து பாங்காய் முளைத்த பயன்றிந்தால் பதினாலுலகும் நீங்காமல் நீங்கி நிறையாமல் நிறைந்து நிறையருவாய் ஆங்காரமானவர்க்குக் கெட்டாக்கனி வந்தமர்ந்திடுமே

பிரணவப் பொருளில் தோன்றிய வித்து முளைக்கும் ஜீவசக்தி வாய்ந்தது கதிர்போல் வளர்ந்து அகரம் போல் நிற்கும் சுபாவமுடையாது. என்ற குறிப்புணர்ந்தால் அதை வெறொருவர்க் கெட்டாத கனியாக எடுத்து கற்ப சாதனை செய்து வந்தால் மாயாசம்மந்தமாக இரட்டித்துத் தோன்றும் கீழேழுமேலேழு

எனப்படும் பதினான் குலகமும் கற்பசாதனை செய்தவன் தன்னையுணர்ந்த மாத்திரத்தில் தோற்றம் நீங்காமலிருந்திருந்த போதிலும் சாதகனுக்கு உலகம் முற்றும் மறைந்து போய் தன்னை மட்டு முணர்ந்த வனாய்ருக்கின்றான். இதற்குக் காரணம் வேறொருவர் தேடி கண்ணில் தென்பட்டதும் கரத்தில் அகப்படாத கனி, கனி சாதகனுக்க சுலபத்தில் கைக்குக்கிட்டியதை கற்பமாக முடித்துண்டதே அதற்குக் காரணம் என்று பட்டணத்தடிகள் குறிப்பிட்டுள்ளார்.

மாணக்கன் ஆசான் கூறிய உபதேசங்களைக் கண்ணால் கண்டும் கரங்களால் எடுத்தும் பக்குவம் செய்து அனுபவித்தும் களி கூர்ந்த ஒரு நாள் ஆனந்தம் பொங்க குருவைப்பார்க்கிறான். இக்குறிப்பையுணர்ந்த குருவும் மாணக்கன் யதேச்சையாய் தனித்து வாழக்கருதினமையால் இனி நீ உன் பிரியம்போல் வெளியேகி கற்பசாதனை பெற்று மரணபயம் நீங்கி சிரஞ்சீவியாய் வாழ்வாயாக இன்று முதல் உனக்கு நான் மறையின் பரிவாஷையாவும் மனதிற்கு தெளிவாக விளங்கும் அதற்கான மற்றும் உள்ள கைபாகம் செய்பாகம் புடபாகம், ஆழிகடைந்து முதமாக்கும் பாகம், மகாபாரதத்தில், இராமயணத்தில் கீதையில் பைபிளில் கூறியபடியே யாம் செய்ததை அனுபோகத்தில் நேர் முகமாகப் பார்த்திருக்கின்றாய் உபதேசத்திற்குறிய அகர உயிர் ஒன்றை மட்டும் பிரணவ பீஜத்திலிருந்து பிரித்து இன்ன தென இது காறும் நீ அறியாதிருந்தனை அதன் செய் பாகத்தை இப்போழுது பிரித்து அரி ஓம் என்ற பொருள் இன்ன தென் அறிந்து கொண்டாய் இதன் உதவியால் இருவினைத் தொடர்புகள் நீங்கி என்றும் மரணமற்ற வாழ்க்கையில் இன் புற்றிருப்பாயாக என்று ஆசிரியர் ஆசி கூறி அனுப்புகின்றார், பெறுவதற்க்கரிய நித்ய ஜீவனாய் விளங்கும் ஓர்ரெழுத்துண்மை உபதேசத்தைப் பெற்றதும் மாணாக்கனுக்கு இது வரை பரிபாஷையாயிருந்த சித்த நூல்கள், வேத இதிகாச புராணங்கள்யாவும் பூதக்கண்ணடியில் அணுக்கள் பிரமாண்டமாக விளங்குவது போல் விளங்க்லாயிற்று மனக்கண்ணிற்கு பரம இரகசியப் பொருள்கள் இன்ன தென விளங்குகிறதை மனதில் தெளிவு பட உணர்த்த மாணாக்கன் பேரானந்தப் பரவசனாகிப் பிறவிப்பயனை என்று பெற்றுப் பூரணமடைவோம் என்று கீழ்கண்ட பாடலைக் கூறிக் கொண்டேஆசானிடம் விடைபெற்று வெளி கிளம்புகிறார்.

"பொய்யுலகே புண்ணுடம்பைப் ற்றெ நாளாய்
போதமெனும் பெறு மாயை வசப்பட்டே யான்,





செய்யுங்கடன் தோன்றாது சிந்தையுற்றேன்
சிவம் செயலே யாவதெல்லாம் சிரமேற் சென்மம்
உய்யும் வகைக்க ஓரெழுத்தும் உணரப்பெற்றேன்.
உயிரிழக்காமுன் உடல் ஒழிப்பதென்றே
மெய்யுரையும் பெருமானே என்னாளன்னாள்
மேதினியில் பிறவிப்பயன் பெற்ற நாளாம்"

என்று மாணக்கன் தன்னிலைமையுணர்ந்து கற்பசாதனை செய்து கொண்டிருக்கின்றான் கற்பசாதனை முடிந்தது. யோகப் பழக்கம் ஆரம்பிக்காத நிலையில் சொரூப சித்திக்காகிய சரீரத்தைப் காற்று மயமாக்கி விடலாம், இரண்டற்ற ஏகவெளி யாகி விடலாம் என்று மாணக்கன் மனதிற்கு உதயமாகிறது எல்லாம் தாமாகக்கருதி இருக்க வேண்டுமானால் மௌன முற்றிருக்க வேண்டும் யோகம் பழகி சொரூப சித்தியைப் பெற வேண்டும் என்ற முடிவு செய்கின்றான். இந்நிலையில் கீழ்கண்ட பாடல் நினைவிற்கு வருகிறது.

யாரிருந்தென்யார் போய் என் ஆரமுதாய் நின்னருள்தன் சீரிருந்தாலுய்வேன் சிவமே பராபரமே (தாயுமானவர்)

உலகில் வாழும் குபேர சம்பத்துடையவர்களனாலும் உன்னை நேசிக்காதவர்களெவர்களானுலும் இருப்பினும் இறப்பினும் பொருட்படுத்தாது நின் கருணைப் பிரவாகவருள் ஒன்று என் மீதுண்டாகி இருக்குமானால் அது ஒன்றே போதும் என்று கூறி தான் கொண்ட கொள்கையில் ஈடுபட்டிருக்கிறார் இதற்குமேல் விவரம் சொரூப சித்தியில் விளங்கும் மேலே கூறிய வனைத்தும் உண்மை என்பதைக் கீழ்காணும் பாடலால் உணரலாம்விரைந்து விரைந்து அடைந்திடுமனி போதினியீரிங்கே மெய்மையுரைக்கின்றேனீர் வேறு நினையாதீர் திரைந்து திரைந்து உளுத்தவரும் இளமை அடைந்திடவும் செத்தவர்கள் எழுந்திடவுஞ் சித்தாடல் புரிய வரைந்து வரைந்து எல்லாஞ் செய்வல்ல சித்தன்றானே வருகின்ற தருண மீது வரம் பெறலாம் நீவிர் கரைந்து உளமுருகிக் கண்களில் பெருக்க கருணை நடக்க கடவுளை உட்கருதுமினோ நளிந்தே இராமலிங்கம் கருணையே வடிவாக கொண்ட அகரம் தில்லை வெளியுள் நடனமாடிய கோலத்தோடு இருக்கின்றது அதைத் தேடி உடல், பொருள், ஆவியை கற்பமாக செய்து உண்டு உங்கள் உடல் பொருள் ஆவியை அழியாது செய்து கொள்ளுங்கள் என்ற மெய் வருந்திடக் கூறுகின்றார்.

## சொரூப சித்தி

மனிதன் இயற்கையை யுணர்ந்து இயற்கை இன்றி அகர மருந்து சித்தி பெற்றால் வாத சித்தி யெல்லாம் கற்பசித்தி பெறலாம். கற்பசித்தியின் மூலம் காலம், தீ, நீர், காற்று முதலான பூதங்களுக்கசையாத காயசித்தி பெறலாம், காய சித்தி பெற்றால் அதன்பின் விரும்பில் யோக சித்திக்கு முயலலாம், யோக சித்தியின் பயனே சொரூப சித்திக்கு இடம் தரும் அல்லது சொரூபசித்தியை விரும்பாவிடில் அதி சூக்கும சரீரத்தை மட்டும் சடத்தினின்று பிரித்துக்கொண்டு அரூபியாகிய வாழக்கையை யடைய்லாம். அல்லது வேறொரு சரீரத்து சொரூபியாகிய வாழக்கையை யடையும் அல்லது வேறொரு சரீரத்தும் புகுந்தும் வாழலாம். கற்பம் என்னும் மருந்து மனிதனை மாற்றிப் பிறக்க வைக்கும் ஓர் சாதனப் பொருள் நாத விந்து ஒன்று கூடி குருவாக முடிந்த மருந்து வெண்மை நிறத்தோடு கூடியது சுண்ணம்புக் கூட்டங்களின் தலை சிறந்து விளங்குவது மாகும் இச்சுண்ணம் ஒன்றே இம்மருந்தைக் கற்பமாக உண்டு வருவதனால், சரீரத்திலுள்ள இரத்த வோட்டம். நாளடைவில் சுண்ணத்தின் சுபாவமாக மாறி விடுகிறது. நம்முடையவிந்துவைப் பரிசேதனை செய்து பார்த்தால் சுண்ணாம் புச்சத்துகள் (Sodium Potassium, Calcium) அடங்கியதாகவே இருக்கின்றது நாம் உட்கொள்ளும் ஆகாரங்களில் சொற்ப சுண்ணச் சத்துக்கள் இருக்கிறது. கற்ப சாதனை செய்யும் மாணாக்கன் உட்கொள்ளும் ஆகாரம் சொற்ப மென்றாலும் நிறைந்த சுண் சத்துடையன பத்தாத குறைக்கு மாணாக்கன் தினந்தோறும் உட்கொள்ளும் கற்பமே, அதிவேக முள்ள சுண்ணமாகும் வேகமுள்ள சுண்ணமாயிருந்த போதிலும், உட் கொள்ளுவதினால் தேகத்தை கெடுக்காது வேகம் செய்யாது குழந்தைகளும் கற்பத்தை உட்கொண்டால் கடைந்த வெண்ணை சாப்பிடுவதுபோலவேயிருக்கும் ஆனதால் காயசித்தி பெற்றவன் இரத்த ஓட்டம் முடிவில் வெள்ளை நிற விந்து வாக மாறி ஓடுகின்றது உதாரணமாக (அகரமாகிய அக்கினியை) உகரமாகிய மதி நீரில் கலந்ததும் எப்படி இரத்தவர்ணமுடைய பொருள்ளாக மாறுகிறது.

என்பது அனுபவிகள் உணர்ந்தது. இந்த இரத்தவர்ணம் எப்படி கைபாகத்தினால் வெண்மை சுண்ணாம்பு நிற்மாகிறதோ அதேபோல் தான் கற்பசாதனை செய்யும் அன்பரின் சரீரத்தில் இரத்தம் வோட்டம் வெண்மை நிற





விந்து வோட்டமாக மாறும் என்பதற்குபோதிய ஆதாரம் சித்து நூல்களில் காணக்கிடக்கின்றது இதைத் கண்டறிந்தோன் சுண்ணாம் பிலிக்கிறது சூட்சம் சூட்சத்திலிருக்கிறது மோட்சம் என்ற வழக்கச் சொல்லை அனுபவத்தில் சொல்லிக் கொண்டு இருக்கின்றனர். மிக சொல்லை சொல்பவர்கும் கேட்பவர்க்கும் இதன் அந்தரார்த்தம் விளங்கியிறாது. விந்து மயமான வெள்ளை இரத்த ஓட்டம் வோடிக் கொண்டிருக்கின்றது என்றால் இதைப் பெரும்பாலோர் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் நமக்கும் இது போன்ற பழக்கச் சொல்லில் நம்பிக்கையுண்டே தவிர நேரில் காண்பித்தோமில்லை எனினும் அறிவின் ஆராய்ச்சியிலும் யூகத்தினாலும் சிந்தித்து பார்த்து முக்கியமாய் நிரூபிக்கும் வகையில் தாம் கண்டு அனுபவித்து வந்து மயவோட்டத்தை வியந்து மாணிக்கவாசகர் தாம் எழுதிய அந்தகவி ஆசானை நினைத்து கள்ளுதியாக்கை யளித்தன கள்ளின் நிறம் வெள்ளையானதால் தம் சரிரத்திலுள்ள இரத்தவோட்டம் விந்து ஓடுவதைக்கண்டு இறைவன் நன்றி கூறுவதாக நாம் எண்ணுகின்றோம். இத்தகைய நிலையில் காய சித்தி உள்ளது என்று மேனாட்டு ஞானிகளின் நூல்களைப் நமக்கு ஆதாரம் காணப்படவில்லை இத்சம்பவம் புரணக்கதை யென நினைத்தாலும் சிலர் நினைக்கவும் அப்படி நினைப்பவர்களுக்கும் இனி நாம் கூறப்போகும் சொரூப சித்தியையும் சிலர், அசம்பாவிதமான காரியமென்று ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் சடமாகக் தோன்றும் நம் சரீரம் யோக சித்தியின் பயனும் காற்றாக மாறி சூக்கும சரீரம் நிழலாடுவதுபோல் விளங்கும் என்று கூறினாலும் தர்கத்திற்கு முண்டாகும். வாதம், கற்பம் என்ற சத்திகளில் நம்பிக்கை இல்லாதவர்கள் இவற்றிற் கெல்லாம் மேற்படியாகப் காண சித்தியும், யோகசித்தியும், சொரூப சித்தியும் சாத்தியமற்றன வென்று சுலபமாகக் கூறி விடுவார்கள் இதை சாத்தியமென்பதாக வேறொரு விடத்தில் “உலோகமும் ஜலமாகமாறும்“ என்ற தலையங்கத்தில் நிரூபித்துள்ளோம். சித்து நூல்கள் கூறியுள்ள ஒவ்வொரு சொல்லும் எத்தகையது என்றால் நெருப்பு என்ற சொல்லைக் கேட்டதம் சுடும் சக்திவாய்ந்தது என்று எப்படி ஒவ்வொரு செல்லும் படி உள்ளது என்று நாம் நமக்காக கொள்ள வேண்டும் இத்தகைய தன்நம்பிக்கை இல்லாதவர்களுக்கு சித்து என்பது அனுபவம் ஒன்றுமே சித்தி சித்தர்கள் இறைவனின் பிரதிபிம்பமாகிய பிரவணத்தை கையில் அடக்கியுள்ளவர்கள் மெய் எனில் மெய்யாய் விளங்குமே மேததினியில் பொய்

எனில் பொய்யாய் போம் என்ற பழமொழிப்படி அறைகுறை மனத்தோடு சித்து நாங்கள் கையில் தொம்வதற்கும் நாம் பாத்திர மற்றவர்களா வோம் பூதமென்ற ஐந்திற்கும் நடுவாய் நின்ற ஞானமே தேய்வாச்சு என்ற அகத்தியர் குறிப்பட்ட பொருள் ஒன்றிலே இறைவன் சர்வ சக்திகள் அடங்கியுள்ளன. இத்தகைய தேயுவைக் கற்பசாதனை செய்வதனால் சரீரமுழுவதும் கற்பமாகிக் கொஞ்ச காலத்துள் கட்டுப்பட்டு வைத்துள்ளது. இதை எவ்விதத்தில் நிருபிக்க இயலும் என்றால் நெருப்பில் கற்பசித்தியை பெற்ற சரீத்தின் ஒரு பாகத்தை வைத்துப் பழுக்க வூதிப்பார்த்தால் சரீரத்திற்கு யாதெரு உணர்ச்சியும் மாறுதலும் தோன்றாது. தண்ணீரில் வருடக்கணக்கில் மூழ்கி இருந்தாலும் மண்ணில் புதையுண்டு கிடந்தாலும் கற்ப சரீரம் யாதொரு கெடுதலுமுண்டாவதில்லை என்ற புராணங்களும் சித்து நூல்களும் ஆதாரமளிக்கின்றது உதாரணமாக கற்பமுண்ணும் வகையும் பாஷாணத்தில் சிறிதளவு பூசிபுட மிக நெருப்புக்கு ஓடாதபடி நெருப்போடு நெருப்பாகக் கட்டுண்டிருப்பதே சான்றாம்.

இரசாயன முறைப்படி சுண்ணம்பை ஜலமாக்க விரும்பினால் சமனிடை நவாச்சாரம் சேர்த்து அரைத்துக் கொண்டேயிருக்கும் போது சூடுண்டாகி வரும் மறுபடியும் விடாது அரைத்துக்கொண்டிருந்தால் காற்றின் குளிர்ச்சியினால் இளகி ஜலமாக மாறிவிடுகின்றது.

இது இரசாயன சாஸ்திரிள் அறிந்த உண்மை இதேபோல் கற்பசரீரமாக்கப்பட்ட இவ்வுடல் முழுவதும் உள்ள இரத்த வோட்ட மெல்லாம் விந்து நீர்போல் மறி, சுண்ணாம்பு நீர், போல் மாறியிருந்தால் இதை எப்படி காற்ற மயமாக்குவது மேலே குறிப்பிட்டது போல், சுண்ணாம்பு சரீரத்திற்கு கந்த நவாச்சாரம் சேர்க்கவேண்டும். ஆனால் அனுபவத்தில் எந்த சுண்ணாம்பிற்கு எந்த நவச்சாரம் சேர்ந்தால் இளகும் என்பதை அனுபவ வாயிலாகக் கண்ட சித்தர்கள் கீழ்வருமாறு கூறலாயினர்.

ஆகாது ஆணுக்கும் பெண்ணுக்குந்தான்
ஆதி தொடுத்தந்த முதலன்பே இன்பம்
போகாது அந்தந்தயினமே சேர்ந்தால்
புணர்ச்சி கனியுண்டாகும் பொல்லாப்பில்லை





என்று அகத்தியர் கூறியது போல் அந்தந்த இனத்திற்கு அந்தந்த இனமே சேர வேண்டும். அப்பொழுது ஆண் பெண் புணர்ச்சியில் நிகழும் இன்பத்தில் விந்து நாதம் இளகும் சுபாவம் போல் கற்பசரீரமுடையவன் சுண்ணாம்பு சரீரத்தை இளக்க மதி நீரினடி தனிலே வதிந்துறையும் சுண்ணாம்பு உப்பே முளையில் உறைந்திருக்கும் நவாச்சார உப்பு மதிநீர் அல்லது செம்மதிப்பால் எனப்படும் கற்ப சரீரியின் யேக நாடிகளாகிய அகர உகர நாடிகளை இணைந்திருக்கச் செய்ததும் அந்த நாடிகள் ஓர்வித யோக சுகத்தில் காணும் உணர்ச்சியிலும் அதிகம் சரீரத்தில் மயிர்க கூச்சல் உண்டு பண்ணும் மூலாதாரத்தில் இறந்து கிடக்கும் குண்டலி சக்தியும் அகர உகர நாடிகள் பூட்டப் பட்டதும் அதனதன் நாடிகள் மூலம் சுழிமுனை சென்று ஜோதி தரிசனம் உண்டு பண்ணுகின்றது அவ்வெளிச்சத்தின் வெப்பம் அக்னி தீர்த்தத்தின் பெருமையாகும்.

இத்தீர்த்தத்தினால் உறைந்து வலு வடைந்ததே முளையின் பாகம் இமயமலை சூரிய வெப்பத்தினால் பனி கிளகி ஜலமாக மாறுவது போல், கற்பகர்யென் முளையும் கோடி சூரியன் ஒன்று கூடி ஒளி வீசும் வெப்பத்தினால் இளகி அண்ணாக்கு உண்ணாக்கு கண்டத்தின் வழியாயிறங்கு கின்றது. அப்படியிருக்கி விழுங்கப்படும் பொருளுக்கு பெயர் மதிபால் சாரநீர் சந்திரபாணம் என்று சித்தர்கள் கூறுகிறார்கள். இக்கார நீர் கற்பசரீரியின் சுண்ணசடத்தை இளக்கி அரூபமாக்க வல்லது அக்கூழியையை தீட்சை விதிப்படி செய்து வர எரும்புகள் இளகிக்கூழாகத் தெரிய வரும் பிறகு கட்டுமும் நீராகி ஆவியாகாப் பரிணமித்துவிடும் எஞ்சிய அதிசூக்கும் சரீரங்கள் ஒன்றோடொன்றா கப்பிணைக்கப்பட்டு சுத்தப் பிரணவ ஞான தேகத்தைப் பெற்று வெளியுடன் கலந்து கொள்ளுகிறது பெற்று வெளியுடன் கலந்து கொள்ளுகிறது. இக்கருத்துகளை முற்றிலும் கண்டு அனுபவித்த மாணிக்கவாசகர் கூறிய பாடலைக் கருத்துடன் ஆழ்ந்து சிந்தித்தால் உண்மை புலனாகும்.

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த வாரமுதே
பொய்மையே யாய பொழுதினைச் சுறுக்கும்
புழுத்தலைப் புலையனேன்றனக்குச்
செம்மையே யாய சிவபதமளித்த செல்வமே

சிவபெருமானே
இம்மையே யுன்னை சிக் கெனப்பிடித்தேன்
எங்கெழுந்தருளுவதினியே
மாணிக்க வாசகர்

கற்பசாதனை செய்து காயசித்தி பெற்ற பெரும்பலோர் சொரூப சித்தியை விரும்புமாட்டார்கள் என்று தோன்றுகின்றது. ஏனெனில் அதில் அதிக சிரம மிருப்பதாகவும் குண்டலி சக்தி சிக்கெனப்பிடிக்க அது மூலாதாரத்திலிருந்து கீழ்ம்பியது சுவாதிஷ்டானம் மணிப்பூரகம், அனாகதம், விசுத்தி, ஆஞ்ஞை ஆகிய ஆறு பீடங்களிலும் தங்கித் தங்கித் தாண்டி அஞ்ஞைஸ்தானம் அடைய வேண்டி இருக்கின்ற தென்றும் அப்படி சிரமப்பட்டு சென்று விட்டாலும் சுய அறிவு மயங்கிக் கிடந்து விடும் சென்ற விடத்தில் இன்பம் சுகித்து கொண்டுயிருக்க இய்லாது என்று கொங்கணா் பூஜாவிதியில் அப்பியாசிகள் பயப்படத்தக்க முறையில் விவரித்துக் கூறுகிறார் அதைப்படிப்போர் உள்ளத்தை நடுங்க வைக்கின்றது. அக்குறிப்பு எம்மட்டில் ஏற்றுக்கொள்ளுவதற் கில்லை அவர் கூறியது கற்பசரீரிஅல்லாதவன் தீக்ஷைபெறுவதன் அடையக் கூடிய கஷ்டங்களைக் கூறியிருப்பதாக நமக்கு விளங்ககூறக் கற்பம என்பது அற்பமென்று என்னுவதற்கில்லை கற்பம் இறைவனின் சுய சொரூபம் பிரணவம் அதையுண்ட கற்பசரீரியின் தேக ஆதியந்தமும் இறைவனே அறிவு மயமாய் ஒவ்வொரு அணுவும் சரீரத்தில் நீக்க மற நிறைந்துள்ளது. அத்தகையகற்ப சரீரி, மூல்தாரக் குண்டலியைக் கிளப்பி அஞ்ஞைாஸ்தானம் செல்ல விருமபின் இவன் கருத்துக்குமானாக ஆராதாரத் தேவதைகளும் அதன் முழு சத்திகளும் இறைவன் சக்திக்கு அடக்கப்பட்டன ஆகையால் குண்டவருகையை யாதொரு இடையூறின்றி வழி விலகி அதற்க காவல் புரிந்து வழி கூட்டி ஆஞ்ஞைஸ்தானம் அனுப்ப வேண்டிய கடமை அவைகளுக்கு உண்டு என்பதைத் திண்ணமாகக் கொள்ள வேண்டும்.

குண்டலி சக்தி ஆஞ்ஞாஸ்தானம் சென்றதும் அதற்வேண்டு சுழிமுனை பீடமாகின்றது ஜோதி தரிசனம் உண்டாகின்றது, அத்தோடு நில்லாமல் இடாபிங்கலா நாடிகள் மூலம் மின்னல் வேகமாக குண்டலினி ஓடிக்ககொண்டிருக்கவே சுழிமுனை என்னும் பிரம்மரந்தரம் திறந்த நிலையில் ஓயாது பிரகாசித்துக்கொண்டிருக்கும் அவ்வெளியுள், உலகங்கள் யாவும் தோன்றும்





இந்நிலையில் சந்திரமண்டலம் இளகிதைல தாரைபோல் ஆகாரப்பைக்குச் செல்ல ஆரம்பிக்கின்றது அப்படிச் செல்லும் தைல தாரை போன்ற மதிப்பாலையுண்ட அண்பர்கள் திவ்விய இரசம்யாவும் திரண்டொழுகும் பாகே தெவிட்டாத ஆனந்தமே என்று அன்பர்கள் கூறுவது பொருளுணர்ந்தோர் யாவரும் ஏற்றுக்கொள்ளத் தக்கதாம் இல்லறம் நடத்தும் ஆண் பெண்கள் கூடி அனுபவிக்கும் அல்பசுகத்தைக் கருதி மக்கள் பொன், பூமிகளையும் இழந்து முடிவில் உயிரையும் இச்சுகத்திற்காக இழந்து விடுகின்றார்கள் சிற்றின்பத்தின் சுகத்தை கருதிமன்னர்களும் பட்டமிழந்து போய் சுபேச்சையடைந்து குடும்ப வாழ்க்கை நடத்தியிருக்கிறார்கள். இதற்குக்காரணம் சத்சங்காமல்லாததே சிற்றின்பம் ஒருகணப்போதில் முடிவு கண்டு இளைத்துக்கிடக்க நேரிடுகின்றது. இருபாலர்களும் அப்படி இல்லை பேரின்பத்தின் நிலை இது பேரின்பம் என்பது வர்ணிக்கத்தக்கதில்லை எனினும் சிற்றின்பத்தின் இருதியில் காணும் அல்பசுகம் போன்றது என்று குறிப்பிடலாம். யோகியின் அகர உகர நாடிகளும் ஆண்றுறிகு பெண் குறி போன்ற உணர்ச்சிகளை யுண்டு பண்ணும் குணங்களை கற்பத்தின் வல்லபத்தால் பெற்றிருக்கின்றது. இரு நாடிகள் இணைத்துப்பிடித்தும் பேரின்பத்தினால் பெரும் மோகம் விளைய ஆரம்பிக்கின்றது. மோகம் விளைந்து முடிவுகாணாது அறிவு தன்னை மறந்திருக்கின்றது. குண்டலி சக்தியும் இடாபிங்கலா நாடிகளின் மூலம் அதிவேமாக ஊடுருவிப் பாய்ந்த வண்ணம் சுழண்டு கொண்டிருக்க இருக்க ஜோதியும், சூழிமுனையில் மேல் மேலும் அதிகமாகப் பிரகாசிக்க ஆரம்பிக்கின்றது உதாரணமாக துவிக் சக்கரவண்டியில் சக்கரம் சுழலும் வேகத்துக்கு தக்கபடி காந்த விளக்கு எப்படி ஒளி வீசுகின்றதோ அதேபோல்தான் குண்டலினி செல்லும் வேகத்தை யொட்டி ஒளி சுழிமுனையில் காணும் என்பதாகத் தீர்மானிக்க வேண்டும். இவ்வொளியின் வெப்பத்தினால் மூளை இளகி சந்திரபானமாகச் சொட்டு சொட்டாக கண்டத்திலிறங்க ஆரம்பிக்கினறது. ஒரு சொட்டு இறங்க வெகுபாடு பட்டு 3000% டிகிரி உஷ்ணத்தினால் இளகி வருகின்றது. ஒரு சொட்டு கண்டத்தில் இறங்கியதும் அதன் விளை சுகத்தை எப்படி வாய் விட்டுச்சொல்ல இயலும். சுகபோக விளைவை வியந்தவர்கள் உண்டவர்கள் இருவினையற்ற சிவயோகிகளேயாவர், தில்லை வெளியில் கலந்து கொண்டவர்களாவார். அவர்கள் எப்படி சிற்றன்ப போக சுகத்தைப் போன்ற பேரின்பயோக சுகத்தைக் கலைத்து இகவாசனை பெற முடியும். ஒருக்காலும் யோக சுகத்தைக் கலைத்து, இதுபோகங்களையடைய விரும்பார்கள்.

சிற்றின்பத்திற்கு ஆசைப்பட்ட விரும்பர்கள். சிற்றின்பத்திற்கு ஆசைப்பட்ட அரசன் இராஜ்ஜியத்தையும் பொருட்படுத்தாது விட்டு ஆசை நாயகியுடன் சிறு இல்லத்தில் வாழப்பிரியப் படுகின்றான். அவளுக்கு உடல், பொருள், ஆவியையும் தத்தம் செய்த விட்டு, அவள் சொற்படி நடக்கின்றான் என்னால் பேரின்பத்திற்குக் காரணனாகிய பேரின்பப் பெரு வாழ்வை ஈயும் இறைவனையடைதற்கு வழிகாட்டும் ஓர் ஆசானுக்கு என்ன செய்யத்தாகும். அதற்கு ஈடாக உலகில் உயர்ந்த பொருள் எதுவுமே கிடையாது. ஆதலால் உண்மை மாணாக்கன் தன் உடல் பொருள் ஆவியைத்தவிர உயர்ந்தது தனக்கு ஒன்றுமில்லை என்றுணர்ந்து தன்னை ஆசானுக்கு அர்ப்பணம் புரிய வேண்டுவதே சுலபமானது வழியும், கடமையுமாகும் என்று நினைத்து அவ்வண்ணம செய்கின்றான். பேரின்பத்தில் ஆழ்ந்திருக்கும் அன்பர்கள் முடிவில் தங்கள் உடல், பொருள், ஆவியை அகண்டாகாரப் பெரு வெளியே அறவிழுங்கும் படி செய்து கொள்ளுகின்றார்கள் இத்தகைய சம்பவம் சித்து மார்க்கத்தில் சாத்திய மென்பதையும் மனுபவத்தில் கண்ட உண்மையை கீழ்கண்ட பாடலால் விளக்கலானார்.

"சாயை மறையாதோ தன்னுடம்பு தன்னுள்ளே
ஓயாமல் கத்தி நடு ஓடாதோ – காயம்
உயரப் பறவாதோ உன் மனையைத் தாண்டாதோ
சுயக் குளிகையாமெனவே சொல்.

(யூகிமுனி)

கற்பசாதனை செய்த யோகி தான் யோகப்பழக்கம் செய்து சரீரத்தை ஆவியாக மாற்றியமைத்தவன் சூரிய வெளிச்சத்தில் சென்றால் தன் சரீர நிழல் பூமியில் விழாது. சட சரீரம் சூக்கும்மடைந்து விட்டால் சூரிய ஒளி சடத்தூடு செல்கின்றது. ஆனதால் தன் சரியை மறைந்து விடுகின்றது. இத்தகைய சரீரத்தை வாள் கொண்ட வெட்டினால் வாள் சரீரத்தை தூடே சென்று ஓடி மீளும், சரீரம் வெட்டுப்படாது முழுசடம் உள்ளபடியே இருக்கும். சூக்கும் க்ரீரமாகி விட்ட படியால் துண்டாட வகையில்லை சரீரம் நினைத்த விடம் பறந்து போக இயலும் இவ்வளவிற்கும் காரண பூதமாயிருந்தது ஓம் என்றும் பிரணவ பீஜம் ஒன்றே இக்கருத்திற்கு ஒத்த படியே மச்ச முனியும் தம் மனுபவத்தை கீழ்வரும்மாறு கூறியுள்ளார்.





அண்டம் கடுக்காயாரு மதிந்திலார்
அண்டம் கடுக்காயருமை யறிந்தவர்
அண்டம் சட்டை யறுத்தே யனை தனில்
அண்டத் தடுத்து அரூபியுமாவரே

அண்டம் என்னால் மூட்டை எனப்பொருள். ஆனால் பறவைகளின் மூட்டைகளில்லை வேற எவ்வித ஜிவரசிகளின் முட்டைகளில்லை

அண்டமாவது கோழியின் முட்டையோ
பிண்டமாவது தன் தலைப்பிள்ளையோ
வண்டரே இது ரெண்டையுமார்க்கமாய்
கண்ட போதல்லோ காண்பது சென்னமே

என்று யூகி முனிவர் கூறியுள்ளார். தப்பெண்ணங் கொண்டு சிலர் உலகத்தின் தலைபிள்ளைகளையும், கோழிமுட்டைகளையும் அண்டமெனக் கருதி இரசவாத வித்தைகள் செய்து பொருள்களை இழந்தார்களே தவிர மெய்யான அண்டக்கல்லைக் கண்டறிந்தார்களில்லை அண்ட மென்பது இறைவனின் பிரதி பிம்பம், பஞ்ச பூதங்களாலானது கடுக்காயின் உருவத்தை பெற்றிருக்கிறது இதன் பெருமையுணர்ந்து அதன் அழுக்காகிய எண்ணையை நீக்கி மருந்து முடித்து உண்பார்களே யானால் முடிவில் அரூபியாகிய இறைவன் நிலையையடைலாம் என்று குறிப்பிட்டுள்ளது இது போன்று சொரூபசித்தியை விரும்பிய இராமலிங்க சுவாமிகள் பெறவில்லை எனினும் விரும்பி பெறக் கூடிய பக்குவத்தில் தம்காயத்தை வைத்திருந்து திடிசென்ற சரீரத்தோடு, மேட்டுக்குப்பம் சித்தி வளாகத் திருமாளிகையின் அறையிலிருந்தே படியே மறைந்து காட்டினார் அப்பொழுது வெளியிட்ட கையொப்பச் சீட்டின் கருத்தை கீழே காணலாம். பிச்சுலாகர் மெக்கப் பிதற்றி நின்ற பேதையனேன் இச்சையெலாம் எய்த இசைந்தருளிக் செய்தனையேத்த அச்சமெலாம் தீர்ந்தேன் அருளமுதம் உண்கிறேன். நிச்சலும் பேரானந்த நித்திரை செய்கின்றேன்.

நாம் இப்பொழுது ஓர் உடம்பிலிருக்கின்றோம். இனி எல்லா உடம்பிலும் புகுந்து கொள்வோம் நாம் உள்ளே பத்து பதினைந்து தினமிருக்கப் போகின்றோம் பார்த்து அவநம்பிக்கை அடையாதீர்கள் ஓர் கால் பார்க்க நேர்ந்தால் யாருக்கும் தோன்றாது வெறும் வீடாகத்தான் இருக்கும் படி செய்விப்பார் ஆண்டவர் என்னைக்காட்டிக் கொடார். சுத்தப்பிரணவ ஞான தேகத்துடன் வெளிப்படுவோம். நாம் திருக்கதவை மூடி யிருக்குங்கால் அதிகாரிகள் திறக்கும்படி ஆக்ஞாரிக்கின் ஆண்டவர் அருள் செய்வார் 1873 ஸ்ரீ முக வருஷம் தை மாதம் 19ந் தேதி திருக்காப்பிட்டு கொள்ளும் தருணம் வெளியிட்டது. மேலே கூறிய பாடலின் கருத்தாவது.

இறைவன் அருளிய அமுதத்தினால் காயசித்தி பெற்றேன் சித்தர்களுக்கான இருப்பிடம் சுழி முனையில் பேரானந்த நித்திரை செய்கின்றேன் இச்சை யாவும் தீர்ந்தன இனியாதொரு அச்சமில்லாது சுதந்திர புருடனாகி செத்துப் பழகும் திறமையாகிய பேரானந்த நித்திரையிலிருக்கிறேன். என்று கூறி மறையலானார்.

## அணுச்சக்திகயே அகரவடிவாயுள்ளது

வான்வெளியினின்று தோற்ற மளிக்கும் கிரகங்களுள் முக்கிய மானவைகள் சித்தர்களால் கணிக்கப்பட்டது ஒன்பது. அவற்றுள் இராகு, கேது எனும் இருசாயாகிரகங்கள் மற்றவை சூரியன் முதல் சனியாகிய ஏழு கிரகங்கள் கணித முறையில்லா ஏழு நாட்களாக வகுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கிரகங்களும் தனித்தனியே சாட்டையற்ற பம்பரம் போல் தன்னைத் தானே சுற்றிக்கொண்டும் சூரியனையும் சுற்றிக்கொண்டிருக்கின்றன. ஓ கிரகங்கள் ஆக்ருஷ்ண சக்தியைக் கொண்டு ஒன்றை விட்டு ஒன்று வழி விலகவோ அல்லது மாறாது.ஓய்வின்றி சுழன்று கொண்டே இருக்கின்றன. இச்சம்பவங்களினால் இரவு பகல் பருவகாலங்கள் தோற்றம் மறைவு ஏற்றத் தாழ்வு வாழ்கையால் ஜீவர்களுக்கு மாறி மாறித் தோன்றுகின்றன இவ்விதம் பரம்தன் படைப்பில் நான்குவகை





யோனிகளையும, ஏழுவகைத் தோற்றங்களையும் முன் குறிப்பிட்ட ஏழு கிரகங்களினால் விளக்குகின்றன.

இவ்வுலகின் கண் உயிர் வாழ்வன வெல்லாம் இயங்கும் பொருட்டு நவக்கிரக சஞ்சாரத்தின் விளைவால் முக்கியம் உணவிற்கு நவதானியங்களையும் ஆபரணங்களுக்கு நவரத்தினங்களையும் தங்களுக்கும் அணிகலங்களுக்கும் நவலோகங்களையும், ஔஷதங்களுக்கு நவ பாசாணங்களையும் நவலவணங்களையும் நவமூலிகளையும் சப்த சாகரங்களையும் தோன்றி மயங்கச் செய்துக்கொண்டிருக்கின்றன அறிவாகிய பரத்தை மறைக்க இத்தனை சிருஷ்டிகளையும் இறைவன் படைப்பில் நாம் காண்கிறோம். ஒவ்வொரு தானியங்களிலும் ஔஷதங்களிலும் உணவுப் பொருள்களிலும் ஒவ்வொரு கிரகங்ளின் சக்தி அதிகம் வியாபித்து இருப்பதால் அந்த அந்தந்த தானியங்களையும் மருந்துகளையும் லோகங்களையும் நவரத்தினங்களையும் அந்தந்த கிரக சாந்திக் கேற்றவாற நாம் உண்டும் அணிந்தும். கிரகாரிகளுக்கு ஆகுதி அர்ச்சனைகள் செய்து சாந்திகளை செய்கின்றோம் இவற்றால் மனசங்கான அனு கூந்ங்களைக் காண்கின்றோம். சித்தர்கள் கொள்கைப்படி இயற்கையில் நவகிரகங்களின் சூக்கும சக்திகள் ஒன்று சேர்ப்பித்து அணுச்சக்திகளாக்கி ஓம் என்ற ஒரு பொருளில் ஜீவாமிர்தமாக விளங்கும்படி இறைவன் கட்டளை இருந்து வருகின்றது. இப்பொழுது இராசிகள் 12லும் 9 கிரகங்கள் சஞ்சரித்துக் வருகின்றன இதற்க நேர்மாறாக ராசிகலும் கிரகங்ளும் ஒன்று கூடி ஒரே வீட்டில் ஒருவாக இருந்து வாழும் வகையில் இறைவன் கட்டளையிருந்து வருவதால் இவையாவும் ஓம் என்ற பிரணவ பிஜத்தின் அணுக்கிரணங்களாகி அடைந்திருக்கின்றது. இறைவன் தன் சர்வ சக்திகளையும் ஓம் எனும் பிரணவப்பொருளின் அமைந்திருக்கச் செய்தருளியதின் நிமித்தம் அதை சித்தர்கள் அண்டக்கல் என்றும் இறைவனின் பிரதி பிம்பம். (The image of Good) என்றும் அழைக்கலாயினர். சித்தபரம்பரம் பறையைச் சார்ந்தவர்களுக்கு மட்டும் பிரணவம் ஒன்றை உலகில் ஜீவாதாரமணதும் நிலையாகவுள்ளதும் எனத் தோன்றும். ஏனையோர்கள் முன்குறிப்பிட்ட நவதான்யங்கயையும், நவரத்தினங்களையும் வாழ்கைக்க ஜீவாதாரப்பொருள்கள் என்று உணர்ந்தார்கள் பசி, பிணி, மூப்புடையர்கள்

பேராசையினால் பீடிக்கப்பட்டு பொருள்களைத் தத்தம் வாழ்க்கைக்கு ஏற்றவாறு பயன்படுத்த வசதி செய்து கொள்ளுகின்றார்கள். வாழ்கைக்கு தோற்றப் பொருள்கள்யாவும் ஜீவாதாரப் பொருள்களாக யிருத்தலால் இவற்றிக்கு மக்கள் பெருமதிப்பும் பெருமையும கொடுக்கத்தலைப்பட்டனர். இங்ஙனம் எல்லோராலும் விரும்பப்பட்ட எல்லோருக்கும் அவசியமான பொருளை சேமித்து வைக்கவும் அவற்றை சுற்றம், உறவு என்பாருடன் பகிர்ந்து பயன் படுத்திக் கொள்ளவும் முனைந்தனர். இப்பொருள்களின் பாலுள்ள விருப்பத்தினால் இவற்றை எப்பாடுபட்டும் அடைய வேண்டும் என்ற எண்ணத்தினால் மக்களிடத்தில் பழைய கொடிய எண்ணங்களும் அல்ப பழக்கங்களும் ஏற்பட்டன. அ சூயை, அருவருப்பு, சூது, வஞ்சகம், பொருமை, போர்குணம், இவையாவும் உண்டாகக் காரணமய இருத்ததும் இப்பொருள்களே. இவற்றின் விளைவை நாம் இன்றும் எல்லா சமயங்களிலும் அனுபவித்து வருகின்றோம். இவ்விதம் மக்களுடைய எண்ணங்கள் பல்வேறு. பொருள்களின்மேல் ஊன்றிப் போவதால் தூயவான் வெளியை எவரும் சிந்தை செய்வதற்கின்றி கிரகங்களின் சூழ்ச்சிகளாலான காட்சிகள் ஏமாற்றுகின்றன தோற்றப் பொருள்யாவும் வான்வெளியின் கர்ப்பத்தினின்று தோன்றிருக்கின்றன அதன் கர்ப்பத்திலேயே யாவும் இயங்கிக் கொண்டிருக்கின்றன என்ற சூக்குமத்தைப் பெரும்பாலோர் உணர்ந்தார்களில்லை அதனால் பிறவியை நீக்கிக் பேரின்பத்தைக் கனவிலும், சிந்தை செய்வதற்கின்றி வாழ்கின்றனர் இவ்விதம் அழியக் கூடிய தோற்றப் பொருள்களையே நம்பி, நிர்வாண நிலையாயுள்ள வான் வெளியைப் பயனற்ற தெனக்கருதி சிந்தை செய்யாது விட்டுப் பிறவிப் பயனை எய்தாது பிறப்பு, இறப்பு எனும் ஓயாச் சுழலில் சிக்கித்தப்பவகையறியாது. மக்கள் சிதைகின்றார்கள் இதற்குக் காரணம் கிரகங்களின் மாயைத் தோற்றங்களேயாம். நவக்கிரங்களும் மனிதனிடத்திலும் சூக்கமமாக இருந்து தங்கள் தங்கள் ஆதிக்கங்களை விளைவிக்குத் தக்கவாறு செலுத்திக் கொண்டிருக்கின்றன. இறைவன் சுத்த வெளியாயிருக்கின்றான் என்பதை மனிதனுக்கு அறிவினின்று உணர்த்தாது, கிரகங்கள் தங்கள் மாயத்திரைகள் ஏழினால் மனிதன் கண்களை மூடிக்கொண்டிருக்கின்றார்கள். இதன் காரணமாக மக்கள் ஏமாற்ற மடைந்து ஒயாச் சுழலில் சுற்றிக்





கொண்டிருக்கின்றனர். கிரகங்களின் விளைவால் தோன்றும் ஏழுவகைத் தோற்றம் பொருள்களை வியந்து அவற்றையே ஜீவாதார மென நம்பிநாமும் நிலையற்ற வாழ்க்கையை நடத்தி முடிவு இன்ன தெனத் தெரியாமல் தேடிய பொருள்களும் நம்முடைய சரீரமும் நமக்குச் சொந்த மில்லாமல் விட்டு மரணத்திற் குள்ளாக்கி விடுகின்றோம் ஆதலில் தோன்றிய உடம்பு அந்தியமடைந்து விட்டது உடம்பில் வாழ்ந்து கொண்டிருக்க ஆருயிர் அழிவுற்று எந்நிலையிலிருக்கின்றது என்று அறிதற்கில்லை போற்றத்தக்க மனித சரீரத்தைப் பெற்றும், அதை அந்தமற்ற தாய் அழியாவுடம்பாய் ஆக்கிக் கொள்ள வேண்டுமானால் ஆதியும் அந்தமுமற்ற பேரறிவைப் பெற, உணரப் பாடுபட வேண்டும் அப்பொழுது அறிவிற்கறி வாகிய பரம் தன் வல்லமை நிறைந்த ஜீவாமிர்தத்தை யீயும் அகரம் தனது பிரதி பிம்பமெனும் பிரணவ பீஜப் பொருளை அறிவினின்று உணர்த்தி வைக்கும் இந்த ஜீவாமிர்தத்தில் சப்த சாகரங்கள்ளெனப்படும் பொருள் அண்டத்துடன் வழலை ஆறுடனே ஏழு ஆச்சு என்று குறிப்பிடும். ஏழுகிரகங்களின் சூக்கும சக்திகள் ஜலவடிவில் பல அணுக்களாக பிரணவத்துள் நிறைந்துள்ளன இதையுணர்ந்து கற்பமாக உட்கொண்டால் நம் கண்களினின்று வான வெளியை உணர்ந்து மறைத்து நிற்கும் ஏழுதிரைகளும், நாம் உட்கொள்ளும் ஜீவாமிர்தமெனும் அக்னி தீர்த்தத்தினால் பொசுக்கப்பட்டு சுத்த அறிவு, மயையின் கலப்பற்று ஸ்படிகம் போல் இரண்டற்ற ஏக வெளியாகிவிடும் அதன் பயனால் நாம் சடத்துன் வாழப்பிரியப்பட்டாலும் அந்தமற்ற வாழ்கை நடத்தி வாழலாம் இரண்டற வேண்டினாலும் ஏக வெளியாகி விடலாம். உன்னுள்ளே நானிக்க என்னுள்ளே நீயிருக்க உண்மையறியாமல் உடலிழந்தேன் பூரணமே. என்று தயுாமானார் கூறியபடி, அயனருளா அவன் திருவுருவத்தைப் பெற்று அதைக்கற்பமாக உட்கொண்டு அவனையறிந்திருந்தமையால் உடலழியாது பூரண மடையலாம், அவனென்றும் நானென்றுமில்லாது இரண்டற்ற ஏகமாக வாழலாம். அன்பினால் பிணைக்கப்பட்டு ஆண்டவனையே எண்ண இருப்பவர் உரம் வாய்ந்த உள்ளத்திரராயும் உலகப் பற்று அற்றவராயும் இருப்பார். இப்பழக்கம் எல்லோராலும் மேற்கொள் இயாலாது பல்லாயிரக்கணக்காண மக்களின் முயற்சிகளும் காலமும் வீணானதை வெளிமயமான விசித்திரங்களில் வாழ்க்கை வீணாக்கப்பட்டதைக் கண்ட சித்தர்கள் எளியதோர் மார்க்கத்தைக்

கண்டனர் அதைப்பலரும் அறிந்து பயனடைய பல நூல்களையியற்றி வெளியிட்டனர். ஏன் பல்லாயிரக்கணக்கான மக்களின் முயற்சிகளும் வீணானது என்றால் காரணம் மனிதர்களின் குறுகிய புத்தியேயாம். விசால அறிவைப் பெற வேண்டில் அறிவு மயமாகிய பர வெளியே நான் எண்ணில் இயங்கும் என் கர்ப்ப வெளியுள் இயங்கும் நான்கு பூதங்களும், நவக்கிரகங்களும், நானாவித விசித்திரப் பொருள்களும் என்னிலிருந்தே தோன்றின. என்னையன்றியா தொன்றுமில்லை என்ற நாள் தோறும் தன்னை மறவாது சித்தத்துப்பழகி வரவேண்டும் இச்சாதனை சுலபமும் உண்மையே யாயினும் எல்லோரலும் மேற்கொள் இயலாது பலபிறவியிலும் பேரறிவைடையப் பாடுபட்டுப் பழகி வந்திருந்தால் இப்பிறவிலில் இத்தகைய எண்ணத்தை மனதில் பதிக்க பாக்கிய முடையவராவர் இப்பழக்கத்தின் முதிர்ந்த பயன், தனக்கொப்பாவனவரும் எதிரியற்ற வருமாய், எல்லாம் தாமாகக் கருதி ஏகவெளியே இருப்பிடமாய்ப் பெற்று இன்புற்று வாழ்பவரே பிறவிப்பெருஞ் செல்வ மென்றும் இறைவனடியாகிய அகரத்தைப் பெற்றவராகும். அல்லது ஒருவனுக்கு மரணம் நிச்சயம் ஏற்படப் போகின்றது சமீபத்தில் என்ற கவலை மனதில் உதித்தாலொழிய இறைவன் நிலையடையும் பெருமுயற்ச்சிக்கு ஆளாக மாட்டான் பொன் பொருளையே பெரிதெனக் கருதி இரவு பகலாய் பாடுபட்டுத் தேடிக் கெட்டிப்படுத்தி வைத்து விட்டு அந்தியத்தில் இல்வு காத்த கிளி போலாகின்றான் மனிதன் வெளியின்றத்தோற்றமில்லை வானின்றி மழையமில்லை என்று நிட்சயிப்பது போல், அவனன்றியோரணுவும் அசையா தென்ற எண்ணம் சித்தர் பரம்பரையைச் சார்ந்த ஒவ்வொருவருக்கும் இருந்தே தீரும் இவ்வெண்ணம் வேரூன்றி நிற்க நிற்க இவர்களின் முயற்சியும் இப்பிறப்பிலேயே கைகூடி காயசித்தி பெற்று விடுகின்றார்கள். எந்த நிலை பேசினா மினங்க விலையாலாலிறப் பொடுபிறப்பையுள்ளே எண்ணினால் செஞ்சது பகீரெனும் துயிலுளுதிரு விழியு மிரவு பகலாய். என்ற தாயுமானார் தம் அனுபவத்தைக் குறிப்பிடுவது போல் உலகில் வேறு எவருக்குத் தோன்றுகின்றதோ இவ்வெண்ணம் அவரே ஞானத்தையுணரக் கூடிய எதிர்கால ஞானியாகும் ஏனெனில் இப்பிறவி தப்பில் எப்பிறவி வாய்க்குமோ ஏது வருமோ என்ற பயம் மனத்திற்குத் தோன்றினவர்களுக்கு மட்டும் மூர்த்தி தலம் தீர்த்தம் என்ற பதங்களுக்குப் பொருள் பிரணவமென்பது விளங்க வாய்ப்பு வரும்.





மெய்க்கல்வி கற்க விரும்பினால் சாகாது வாழ்ந்து கொண்டிருப்போர். ஞான நூல்களையும் முறையோடு ஆராய்ச்சி செய்ய வேண்டும் நாம் நம் நாட்டு நூல்களையும் மேல் நாட்டு நூல்களையும் ஒப்பிட்டுப் பார்த்து விளங்கிக் கொள்ளக்கூடா விட்டாலும் சித்தர்களால் விடுத்துள்ள விடுகதைகளாலும், விளையாட்டு பாடல்களாலும் கர்ண பரம்பரையாய் வீடுகள் தோறும் ஞானவுணர்ச்சி வெளிவந்து கொண்டிருக்கின்றன. அவற்றைப் பெற்றோர்கள் விளையாட்டு நேரங்களில் விடுகதைகளாக நமக்குப் போதித்திருக்கிறார்கள் அவையும் நமக்கு பயனளிக்க வில்லை என்றால், இராமாயணம், கீதை மகாபாரதம் மற்றுமுள்ள இதிகாச புராணங்கள் மூலம் கூறாது கூறி வைத்துள்ள உண்மைப் பொருளைச் சற்று ஆழ்ந்து சிந்தனை செய்வோமானால் சகாவரமருளும் நாதத்தை சப்தசுரத்தை சப்த சுரமுமடங்கிய பிரணவத்தை சப்த சாகரத்தை ஏழுநிலை மாடத்தை ஏழு கன்னிகைகளை ஏழு ஊசிக்காந்தந்தை, சப்தரிஷி மண்டபத்தைத் தாங்கி நிற்கும் ஏகாக்ஷரம் இது தான் என்று அறிவு தெளிவுபடுத்தும். அல்லது முன்னோர்களால் எழுதியுள்ள புராணங்கள் மெய்யே, பொய்யோ அல்லது கட்டுக்கதை என்றே ஏற்றுக்கொண்டு அக்கதைகளின் தத்துவ விளக்கங்கள் எதைக் குறித்து விளக்கிவருகிறன என்பதை ஆழ்ந்து சிந்தனை செய்யுங்கள் உண்மை ஞானம் விளங்கி கொள்ளாதவர்களே புராணங்களைக் குற்றமெனக் கூறுகின்றார்கள் அந்நூல்களை நன்றே தீதோ கூறுவதற்முன் ஆழ்ந்து சிந்தனை செய்து முடிவு கூறவேண்டும் ஏனெனில் ஓர் காலம் யாம், பள்ளி மாணவனாயிருந்த காலத்தில் உபாத்தியாயர் புராணக்கதைகளை போதிக்கும் போது இது அசம்பாவிதமான காரியமாகும் என்று கூறுவோம் உபாத்தியாயர் கோபக்குறியானால் சும்மாயிரு சொல்வதைக் கேள். மகான்கள் எழுதியது பொய்யல்ல என்று கூறி சமாதானப்படுத்துவது வழக்கம் இதை மாணவர்கள் ஒன்று கூடி வீடுகளில் போய் இக்கதைகளுக்கு ஆதாரம் போதுமானது கிடையாது. எல்லாம் கட்டுகதைகள் என்று பேசி ஓர் முடிவுக்கு வந்தோம் இப்படி இருக்கம்போது ஒருநாள் ஓர் துறவி தெருவில் போய்க்கொண்டிருந்தார் அவர் முகம் கருணையோடு கூடியும் கண்கள் பற்றற்றனவாகத் தென்பட்டன. அவருடன் போய் சுவாமி எங்கே போகின்றீர்கள் என கேட்டதற்கு அவர் ஆற்று மணலில் உட்காரப்போகிறேன்

என்றார் நானும் அவருடன் போய் உட்கார்ந்து சற்று நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு ஒரு சந்தேகம் மனிதில் வெகு நாளாகப் போராடிக் கொண்டிருக்கின்றது என்றேன். அவர் என்னவென்று கேட்க நாம் கூறியதாவது பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயர்கள் தமிழ் பாடம் வேளையில் வேத இதிகாச, புராணங்களை வியந்துபேசி, அவற்றிலிருந்து சில மேற்கோள்களை எடுத்துக்கூறுகிறார்கள் அவற்றுள் மகாபாரத்தில் திருப்பாற்கடல் கடைந்து அமுதம் எடுத்துண்ண சுர அசுரர்கள் சமுத்திரத்திற்கு இருபுரங்களிலும் நின்று கொண்டு அந்த வெள்ளியங்கிரியை மத்தாக்கி எந்த வாசுகி என்னும் பாம்பைகயறாக்கி, சுர, அசுரர்கள் எதிர் மாறாக எந்தந்த தரைகளில் நின்று ஆழியைக் கடைந்தார்கள். அவர்களும் ஆறு அடி மனிதர்கள் தானே இருக்கவேண்டும் இவர்கள் பூமியைத் தாங்கித் கொண்டிருந்த ஆதிசேடனை எப்படிக் கையிலேந்தி வரமுடியும், வெள்ளியங்கிரியை எப்படி பெயர்ந்து மத்தாக செதுக்குவது எப்படி முடியும், மத்தை ஆழியுள்ளிட்டு வாசுகியைக் கயறாகக் சுற்துவது யாரால் முடியும். கூர்மாவதாரம் பூண் கிருஷ்ணன் ஆழியுள்ளடங்கி மத்தை எவ்வளவு நேரம் தாங்க முடியும் அப்படிக் கடைந்து வந்த அமுத கலசத்தின் உட்பொருளை பங்கிட்டுப்படுத்தாது, ஒரு சாரார் மட்டும் பருகுவது முறையா ? இவை வுண்மை என்று எப்படிக் கூற அறிவுடையவர்களால் இயலும் ? என்று நயம்படக் கேட்டோம். அதற்கு அவர் கூறியதாவது அப்பா நீ சிறுவன் உனக்குப் போதிக்கப்படுவதன் விஷ்யமல்ல வேத இதிகாச புரணங்கள் அவைகள் யாவும் எம்போன்றோர்க்காரியா இருநிதிகளை அகத்தேவைத்திருக்கும் அமுதகலசம் போன்றது. புராணங்களில்லை யானால் அறிவுடையோர் தேடிக்காண முடியாத ஒன்றே கதைகளின் மூலம், வெளியாகும் முக்கிய சந்தர்ப்பங்களினால் பிரணவப் பொருளை விளங்கிக் கொள்ள முடியும் இதன் இருக்குமிடத்தை அறிந்து எடுத்து வந்து யாருமறியாத ஏகாந்த விடத்தில் வைத்து அண்டபிண்டங்களாக பிரித்து அயன், மாலாகப்பிரந்து அயகாந்தமாகப் பிரித்து சூரிய, சந்திரராகப் பிரித்து சுர அசுர்களாக பிரித்து வாசுகி வெள்ளியங்கியாகப் பிரித்து கிருஷ்ணனை ஆழியுள்ளமுத்தி சப்த சாகரங்களைக் கடைய சுர அசுரர் தொழில் செய்து முடிவில் அமுதகலசத்தை எடுத்து அடியார்கள் உண்டு இருவினை நீங்கி என்றும் இறவாது இன்புற்று வாழ்ந்தி ருக்கும் வகையைத் தெளிவுபடவே புராணங்கள் விளக்காது நல்வினையுள்ளோர் மெய்ஞான முணர்ந்தோர் பேரறிவைப் பெற்றோர் எளிதில் உணரதக்க வகையில் மகரிஷிகள்





கருணையுடன் எதிர்கால மக்களுக்காக வெளியிட்ட நூல்களாகும் என்று கூறினார், மற்றும் சில வேதத்தின் பூட்டுகளித்திறந்து காட்டிப் போனார், இன்று இப்புரணங்கள் இருந்திராவிடில் பாரெங்கும் புகழ்ந்து பேசப்படும், பட்டணத்தடிகள் பத்ரகிரியார், திருவள்ளுவர், இராமலிங்க வள்ளல் போன்றோர் தோன்றி மெய் ஞானிகளாய் விளங்கியிக்க இயலாது மற்றும் உலகமறியாத பல ஞானிகளும் உலகிடை மனிதர்களோடு மனிதரைப் போல் தங்களைக் காட்டிக்கொள்ளாது இருக்கிறவர்களும் உண்டு உதாரணமாக இன்று இவ்வுலகப்பெரும் பகுதியிலுள்ள கிருஸ்துவ மதம் உண்மையை அடிப்படையாகக் கொண்டிருந்தும் நம்முள் நன்குணராத பலர் கிருஸ்துவ மதம் பொய் யொன்று வாதாடிவருகிறவர்களும் உளர் மதபேதம், ஜாதி பேதம், நிற பேதம், சகோதர உள்ள வரை ஞான முணராதவரை ஒவ்வொருவரும் முதியோர்களும் மாணவப் பருவம் நீங்காதவர்கள் என்றே நாம் கருத வேண்டும் ஞானத்தை உணர்ந்தவர்களே பெரியோர்கள் எம்மதமும் சம்மதமென்பவர்கள் எல்லோரும் பிரணவப் பொருள் ஒன்றையே அடிப்படையாகக் கொண்டுள்ளவர்கள் என்று நாம் அறிந்து கொள்ள வேண்டும் ஞானத்தை யுணராதவர்களும் கூட சுபாவத்தில் எம்மதமும் சம்மதம் எல்லோரும் சகோதரர்களே என்ற நோக்கத் தோடிருக்கிறார்கள் அவர்களை ஞானி என்று கூறுவதற்கில்லை இக்கருத்தை ஆதாரமாக கொண்ட பிரம்ம ஞான சங்கத்தினர் இன்றும் பிரம்மத்தையுணர மெய்ப் பொருளை யுணரப்பாடுபட்டு வருகின்றார்கள் என்பதை யாவரும் பாராட்டத்தக்கதே பிரம்மத்திலிருந்து பிரியும் அலிமயமாகிய ஜலமே சப்த சாகரம் சப்த சாகரம் எழுவகைத் தோற்றங்களகவுள்ளது ஏழுவகைத் தோற்றங்களை யூடுருவிப்பார்க்க வைக்கும் வல்லமை யளிக்கும் ஆதியந்தம் பரமநாழிகை யுள்ளடகிங்கிய பிரணவ பீஜமே இவ்வளவிற்கு காரணமாகவுள்ளது என்பதையுணர்ந்தவனே பிரம்ம ஞானியாகும் தோற்றப் பொருள் யாவையும் ஊடுருவிப்பார்க்கவல்ல அஞ்சனக்கண் ஒருவனுக்கு ஏற்ப்பட்ட தென்றால் அப்பொழுது எத்தகைய அணுச்சக்தி கண்ணொளியிருக்கின்றது என்பதை வாசகர்களே யூகித்துணர வேண்டும்.

# பிரணவம் பேரன்பருக்கே

மனிதன் தோன்றிய காலம் முதல் நாளுக்கு நாள் அவனது அறிவு வளர்ந்து கொண்டே வந்திருக்கின்றது தன்னறிவின் கூர்மையால் இயற்கை சக்திகளை ஓரளவுக்குக் கட்டுப்படுத்தவும், காட்டில் வாழும் பிராணிகளை எதிர்க்கவும், வெல்லவும் பழகிக் கொண்டான் இயற்கையிலே மறைந்து கிடக்கும் எண்ணற்ற சக்திகளை வெளிப்படுத்தித் தனக்கு வேண்டிய வசதிகளை வாழ்க்கைக்குச் செய்து கொண்டான் எதையும் வென்றான் எங்கும் சென்றான் மனிதன் ஆனாலும் தன்னை யொத்த மனிதனை மனிதன் இன்றளவும் வென்றானில்லை ஏசுகிருஸ்துவிற்குத் தன் சீடருள் ஒருவரே வைரியாயிருந்து காட்டிக் கொடுத்தது போல் இன்னும் மனிதனுக்குள் ஒரே வைரி மனிதனேயாம் இதற்குக் காரணம் மனிதன் தன்னை யாரென்று உணராததேயாம் மன்னைக் கண்டு பிடித்தான் வான் ஊர்தியைத் தோற்றுவித்தான் அணுவைப் பிளந்து அதன் சக்தியை வெளிப்படுத்தினான் அணுசக்தியை பயன் படுத்தி அதன் வல்லமையை பகிரங்கப் பிரயோகம் செய்து உலகை நடுங்க வைத்தது மல்லாமல் தானே பெரியவனெனக் காட்டிக் கொண்டான் தன்னைப் போல் பிறரையும் நேசியாது தன் போன்ற மனிதனைச் சகோதரனாகக் கருதாது குற்றத்தைக் காட்டி குணத்தைப் புகட்டாது அமைதியோடு வாழ விட்டானில்லை வலக் கன்னத்தில் அடித்தால் இடது கன்னத்தையும் காட்டு என்று ஏசுகிருஸ்து கூறிய மொழியைக் கற்றும் அதைக் கனவாக்கிவிட்டார்கள் போலும்.





## அயச்செம்பு கல்பம் – 16

அ. இராகவன்

பரமசிவன் பார்வதியும் கணபதியும் போற்றி
பணிவான சுப்ரமணி தாழே காப்பு
தரும் சிந்தை வழி வந்த குருமுறைலே காப்பு
தானமொன்றும் பெறவில்லை இந்நூலுக்கு
கருமம் செய் பலனை எதிர்பாராதே என்று
கீதை சொன்ன தத்துவத்தை ஏற்றுக்கொண்டு
மறைவாக இருந்த இந்த கல்பந் தன்னை
மறைப்பின்றி அயச்செம்மை செப்புகிறேனே 1

கருணாகர அடிகள் சொன்ன செய்திக்கு முன்
கல்பமுறை ஒன்றறிந்துக்கொண்டோமானால்
அருணன் போல் தேகமது ஒளியே வீசும்
அன்னமய கோசமது செவலைப்பாயும்
புறத்தேகம் செவலை நிறம் பாய்ந்ததானால்
பாவலனே அவன் தேகம் கல்பதேகம்
அறவழியில் குருமுறையை பெற்றுக்கொண்டு
அறிவுள்ள மனிதராய் பயில்வோம் யோகம் 2

அதற்க் கென்றே இம்முறையை இங்கே சொல்வேன்
அயம் இரண்டு பலமெடுத்து பழச்சார் தண்ணில்
இதமாக கழுவியதை ஊரவைப்பாய்
இரும்போட கல்மிசங்கள் நீங்கும் வரையில்
பதம் பார்த்து அதைக் கழுவி எடுத்துக்கொண்டு
பக்குவமாய் நல்லெண்ணை தன்னில் வைப்பாய்
முதல் மூன்று நாள் போதும் அதை எடுத்து
மூட்டுவாய் அடுப்பொன்றை சட்டியை வைப்பாய் 3

சட்டியிலே எண்ணையிலே ஊறும் அயத்தை
சடுதியிலே போட்டு நன்கு வறுத்தெடுத்தால்
சட்டியிலே உள்ள அயமும் சேர்ந்து
சடசடவென தீப்பிடித்து எரியும் அதனை
வட்டுடனே எரிய விட்டு ஆறியப்பின்னெடுத்து
வளமான மூசையிலே மருந்தைப் போட்டு
சத்தெடுக்கும் வகையினிலே உருக்கிக்கொண்டு
சரஉலையில் ஊத்துதெடுக்க உருக்குவாயே 4

உருகி வரும் போதினிலே போடும் மருந்து
உண்மையான பூவாகும் முப்பூவாகும்
அருகி வரும் கெந்தியுடன் சமனாய் சேர்த்து
அயத்தினிலே கிராசமது செய்திடவேண்டும்
உருகுமயம் முழுவதுமே சத்தாய்ப்போகும்
உறுதியுடன் சத்தெடுத்து வைத்துக்கொண்டு
புருவ மையம் தியானித்து கருவாய் கேளு
பார்வைக்கு அயமதுவோ சிட்டம்போலாம் 5

சிட்டத்தை சேர்த்தெடுத்து முப்பூவோடு
சேர்த்தரைத்து மறுபடியும் ஊதிக்கொள்ள
சிட்டமது மேல்நிற்க்கும் மூசைக்கு கீழே
சீராண அயமதுவோ சத்தாய் நிற்க்கும்
மட்டற்ற மகிழ்ச்சியோடு சத்தை எடுத்து
மயங்காமல் சத்தி செய்து வைத்துக்கொள்ளே
திட்டமிட்ட படியந்த செம்பை சத்தாய்
தவப்பயனோடெடுக்க இனி மார்க்கம் கேளு 6



தெய்வீக சித்தமார்க்கம்

மார்க்கத்தை சரியாக கண்டுக்கொண்டால்
மயங்காமல் செம்பதனை சுத்திச் செய்து
மூர்க்க முடன் தகடாக தட்டிக்காண்டு
முன்சொன்ன முப்பூவை கரைத்துக்கொள்ளே
போர்க்கருவியை கொல்லன் உலையில் ஊதித்தட்டி
பழுது பார்க்கும் மனிதனைப்போல் காய்ச்சசுவாயே
பார்க்கும்போ தருகினிலே சட்டிவைத்து
பழுக்கச் செம்பை காய்ச்சி அதன் மீது முன்னே 7

முன்னாந்த கரைச்சலையே ஊற்றிக் தேய்த்து
செம்பதனை பழுக்கவிட்டு சட்டியில் தட்டு
முன்வைத்த செம்பெல்லாம் அதராய் விழும்
வினை எல்லாம் பொடிபொடியாய் போகவென்றே
முன்பதனை எடுத்து வைத்து முப்பூக் கூட்டி
சேர்த்தரைத்து உலையில் வைத்து ஊதிக்கொள்ளே
முன் பார்த்த செம்பெல்லாம் சக்காய் காண்பாய்
முடிந்த வரை சேதமின்றி சேர்த்துக்கொள்ளே 8

சேர்த்தந்த அயத்தோடு அளவாய் சேர்த்து
சேர்ப்பதற்கோ அளவுண்டு தேயு நன்று
வாய்வதுவோ முக்காலாய் சேரக்கலாகும்
வளமான லிங்கமது அரையுமாகும்
கார சார ஜெயநீராம் முப்பூ ஜெயநீர்
கலங்காமல் அதிலறைத்து வில்லைத்தட்டி
காய்ந்தப் பின்பு புடமிட்டு எடுத்துப் பார்க்க
கண்மயங்கும் அருணன் நிற செந்தூரமாகும் 9

செந்தூரம் சிவப்பதற்க்கு கெந்தகச்செம்பை
சேர்த்துக்கொண்டால் மேலுமது கல்பமாகும்
கெந்தகத்தின் செம்பெடுக்கும் மார்க்கமென்ன?
காய கல்ப மார்க்க மீது என்பதாலே
கெந்தகத்தின் செம்பதுவோ சிறபுறவாகும்
கெணிதமுடன் விதியுள்ளோன் செய்வான்பாரே
கெந்தியுட சத்தனை யெடுத்துக்கொண்டு
காரமொடு முப்பூவை சேர்த்துக்கொள்வாய் 10

சேர்த்தெடுத்து முப்பூ நீர்விட்டு ஆட்டி
புடமிட்டு எடுத்தனை வைத்துக்கொண்டு
பொரிக்காரம் சேர்த்தனை உருக்கிக்கொள்ள
கெந்தியது சத்தினுட செம்பும் ஆகும்
இச்சத்தை மேற்கண்ட மருந்தில் சேர்த்து
இறை நினைவாய் புடமிட்டு எடுத்துப்பார்க்க
அயச்செம்பு செந்தூரம் என்னச் சொல்வேன்
அதை எடுத்து அரைத்துக்கொண்டு பத்திரம் செய்வாய் 11

சத்தான அயச்செம்பை அழுகிய வாழை
சார்ந்தெடுத்து சிறுத்துளையும் இட்டுக்கொண்டு
சத்தளவோ நெல்லெடைதான் வைத்துப் பார்த்தால்
வைத்தாள் முதல் வாழை காயாய்போகும்
முத்தான வாழையிலே அழுக இல்லை
கெட்டும் போகாது அதில் வாடையும் இல்லை
அக்கயைப்போல் கட்டையைப் போல் இறுகிபோகும்
சடம் நமது சடம் கூட இப்படியாகும் 12





கல்ப மருந்ததைக்கொள்ள சடத்தில் உள்ள
வாதநீர் பித்தநீர் சிலேத்தும நீரை
கழற்றி விட்டு அதன்பிறகே கொள்ள வேண்டும்
இல்லையெனில் அந்நீரே எமனாய் போகும்
கல்ப்பமென்ற பேரினிலே வேதனை மீறும்
கல்பதேகம் என்று சொல்வதற்க்கு எளிதாய் போகும்
அல்பமென்று செய்தாக்கால் வேதனை மீறும்
அர்த்த மறிந்த னுபவத்தோர் சொல்லச் செய்வாய் 13

செய்யுமந்த கல்பமது சடத்தைக்கட்டும்
வாதபித்த சிலேத்துமநீர் அதனையும் கட்டும்
கொய்தறியும் வினைப்பயன்போல் வாசியை கட்டும்
கருத்தொத்த மாணவர்கள் செய்வார் பாரே
உயர்வான பிரம்ம கற்ப முப்பூவுக்கு முன்
இதுப்போல கற்பத்தை கொண்டப்பின் தான்
உயர்வான சடம் காண்பாய் முறையறியாமல்
போனாக்கால் சடமிழந்து போகும்பாரே 14

போகுமந்த குருவருளும் திருவருளும் தான்
வேண்டுமடா வாழ்க்கையிலே இல்லாப்போனால்
ஆகுமோ கற்பமுப்பூ எதற்க்கும் அகா
அணுமயமாய் போவதற்க்கோ சடமும் போகா
யோக மார்க்கம் கல்ப மின்றி முழுமைபெறாது
செந்தூர ஜெயநீராய் சடத்தைக் காக்கும்
ஆகமங்கள் ஆயிரம் தான் உண்டென்றாலும்
அதற்க்கெல்லாம் இதுதானே மகுடமாகும் 15

மகுடத்தை சூட்டினாற்ப்போல் ஊரார்முன்பு
மறைக்காமல் பேசுகின்றேன் என்றுக்கூறி
அகம் முழுக்க அழக்காகத் திரிந்துக்கொண்டு
அடுத்தவரை குறைக் கூறித்திரந்தாலென்ன
இக பரத்தை கேட்டு விட்டு இது வென்ன பேச்சு
எல்லாமும் அவன் செயலாய் போனப் பின்பு
அகம் பிரம் மாஸ்மி என்ற வாக்கியம் கொண்டு
அற்புதமாம் காய கல்பம் உண்டுத்தேரே 16



தெய்வீக சித்தமார்க்கம்

40